RE/MAX BLUE FORCE REALTY
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 02 டிசம்பர் 2022 இதழ்:- 32

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!



# தமிழீழத் தேசமெங்கும் எங்கும் பேரெழுச்சியுடன் நினைவேந்தல்

தாயக விடுதலைக்காகத் தம் இன்னுயிரை ஈந்த வீர மறவர்களுக்கு உயிர்க் கொடையாளர்களுக்குச் சுட ரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் தமிழர் தாயகமான தமிழ்ஈழம் எங்கும் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வாக நடைபெற்றன வடக்குகிழக்கில் உள்ள அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் பொது இடங்கள் 27 நம்பர் 2022 ஞாயிற்றுக் கிழமை மாலை (5ம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு ரணிலிடம் கோரிய "றோ"



இலங்கை தமிழ் சிறுபான்மையினருக்கான சமஸ்டி தீர்வு உட்பட 1987 முதல் அளிக்கப்பட்ட வாக்குறுதி கள் அனைத்தையும் நிறைவேற்றும் என இந்தியாவின் ரோ அமைப்பின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுக்கொண்டார் என ஜனாதிபதி க்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (6ம் பக்கம் பார்க்க)



# பேச்சு ஆரம்பிக்க முன்னரே நிபந்தனைகளை முன் வைக்க வேண்டாம் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு!

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு ஆரம்பமாவதற்கு முன் னரே நிபந்தனைகளை தமிழர் தரப்பு விதிக்கக் கூடாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசியல் (3ம் பக்கம் பார்க்க)

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடு ஈழநாடு

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை **eelanadu.ca** மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# கிழக்கையும் சமமாக நடத்தினால் தீர்வு நாம் தடையாக இருக்க மாட்டோம்! அரசை விட்டு விலகவும் தயார் என்கிறார் பிள்ளையான்!

கிழக்கு மக்களையும் இணையாக நடத் தக்கூடிய திட்டமிடலுடன், தெளிவான அரசியல் தீர்வுடன் பயணிக்கும் திட்ட வரைவை முன் வைத்தால் அவ்வாறான தீர்வு முயற்சிக்கு தடையாக இருக்க மாட்டோம். அப்படியான சூழல் வந்து தென்னிலங்கையின் எழுச்சிக்கு முகம் கொடுக்கும் சூழலை உருவாக்க வேண் டும் என்றால் இப்போதுள்ள நிலைமை யிலிருந்து மாற்று சிந்தனையை கூட பரிசீலிக்க தயார் என்று தெரிவித்திருக் கிறார் பிள்ளையான் என்று அறியப்பட்ட இராஜங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்.

பாராளுமன்றில் வரவு -செலவு திட்ட உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்துடன் அரசியல் தீர்வு க்கு அனைத்து கட்சிகளுக்கும் அழை ப்பு விடுப்பதாக தமிழ்அரசுக் கட்சி கூறியது. ஆனால், பேச்சில் என்ன நடந்தது என்பதில் வெளிப்படைத் தன்மை இல்லை. நீண்ட அழிவுகள், இழப்புக்கள் தொடர்பில் நாம் விமர்சனங் களை முன் வைத்து வருகின்றோம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சொன்னது போல் 13 பிளஸிலிருந்து தான் ஆரம்பிக்கப் போகின்றோமா? அது தொடர்பில் கட்சிகளிடம் ஒற்றுமை வந்துள்ளதா? அல்லது வைரமுத்து சொன்னது போல் பட்டு வேட்டி கனவில் இருக்கின்ற போது கட்டியிருக்கின்ற கோவணமும் களவாடப்பட்ட கதையாக மாற போகின்றதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லாட்சி காலத்தில் அதிகாரப் பகிர்வு தொடர் பாகக் கேட்டுக் கொண்டிருக்கும் போது தான் அரசமைப்பில் உறுதிப்படுத்தப் பட்டுள்ள மாகாண சபை முறைமைகள் கை நழுவி போயின. இந்த அரசும் தேர்தல் நடத்தக்கூடிய சூழல் இல்லை



என்ற விடயம் இருந்தாலும் அந்த நேரத்தில் இது பெரும் பிரச்னையாக எழும் என்று சரியாக ஆராய்ந்து பார்க்கப்படாது எடுக்கப்பட்ட முடிவு காரணமாக மாகாண சபைத் தேர்தல் இன்று வரை நடக்கவில்லை.

அதிகாரம், அதிகாரம்.... என்கின்றோம். ஆனால், அரசமைப்பில் உறுதிப்படுத்தப் பட்ட மாகாண சபை அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டு அதைத் தாண்டி 13 பிளஸ் பற்றி பேசக்கூடிய ஒற்றுமை தமிழ் கட்சிகளிடம் வந்தால் தான் அது பெரும் பலம் என்பது எனது நிலைப்பாடு. இல்லை என்றால் கட்சிகளுக்குள் பிளவு களையும் பிரச்ச னைகளையும் ஏற்டுத்திக் கொண்டு ஊடகங்களுக்கான கருத்துக்களையும் அடுத்த தேர்தலில் வெல்லக்கூடிய கருத்துக்களையும் கூறிக ்கொண்டிரு ப்போம்.

இறுதியில் தற்போதுள்ள சூழலையும் பயன்படுத்தாமல் விட வேண்டியேற்படும். 70 ஆண்டுகளாக நீடிக்கின்ற இந்த பிரச்னையில் அரசியலுக்காக அல்லது அடுத்த ஆட்சியை பிடிப்பதற்காக வருகின்ற தலைவர்கள் அதனை சரியாகப் பயன்படுத்தி இனவாதத்தை கிளப்பி விட்டால் அதன் மூலம் மீண் டும் பிரச்சனைகள் எழும் நம்பிக்கை தரக்கூடிய தீர்வுகளை நாம் தெளிவான பார்வையோடு சிங்கள மக்களுக்கு முன் வைக்க வேண்டும். சிங்கள மக்களோடு,

சிங்கள தலைவர்களோடு பேச வேண்டு மெனக் கூறிக்கொண்டு கடந்த கால கசப்புகளை அதனூடாக வரும் வெறு ப்புகளை மோசமான வார்த்தைகளால் உணர்வுகளைத் தட்டி எழுப்பிப் பேசி சிங்கள மக்கள் மத்தியில் காயங்களை ஏற்படுத்தக்கூடாது .அது போன்று அவ்வாறான கருத்துக்களுக்கு இங்கு ள்ள அரச தரப்பினர் பதிலளிப்பதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்களின் மனங் களில் காயங்களை ஏற்படுத்தக்கூடாது. ஆனால், அப்படியான உரையாடல்கள் தான் இடம் பெறுகின்றன.

வடக்கில் உள்ள தலைவர்கள் உண்மை யான இணக்கப்பாட்டோடு கிழக்கு மக்களையும் இணையாக நடத்தக்கூடிய திட்டமிடலோடு தெளிவான அரசியல் தீர்கோடு பயணித்தால் அதற்கான திட்ட வரைவை எமக்கு முன் வைத்தால் நாம் நிச்சயம் அவ்வா றான தீர்வு முயற்சிக்கு தடையாக இருக்க மாட்டோம். அப்படி யான சூழல் வந்து தென்பகுதியின் எழுச்சிக்கு முகம் கொடுக்கக் கூடிய சூழலை உருவாக்க வேண்டுமென்றால் நாம் இப்போதிருக்கின்ற நிலைமை யிலிருந்து விடுபட்டு மாற்று சிந்த னையை கூட பரிசீலிப்பதற்குத் தயார். திட்டமிட்டு நாம் காய் நகர்த்தினால் தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வைப் பெற முடியும் என்றார்

# பேச்சு ஆரம்பிக்க முன்னரே நிபந்தனைகளை முன் வைக்க வேண்டாம் என்கிறார் ஜனாதிபதி



தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு ஆரம்பமாவற்கு முன்னரே நிபந்த னைகளை தமிழர் தரப்பு விதிக்கக் கூடாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசியல் தரப்புக் களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். வரவு செலவுத் திட்ட விவாதம் முடி வடைந்த பின்னர் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் சர்வகட்சி கூட்டம் நடத்தப் படும் என்று ஜனாதிபதி ரணில் நாடாளு மன்றில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஆராய்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மூன்று நிபந்தனைகளை விதித்திருந்தனர். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம் கேட்ட போதே அவர் மேற் கண்டவாறு பதிலளித்தார்.

பேச்சு ஆரம்பிக்க முன்னரே நிபந்தனை களை முன் வைக்காதீர்கள். முதலில் பேச்சு மேசைக்கு வாருங்கள். பேச்சு மேசையில் பேசி, தீர்வு தொடர்பில் முடிவு எடுப்போம். என்ன பிரச்சினை என்றாலும் பேச்சு மூலம்தான் நல்ல தீர்வு கிடைக்கும்.

கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத் தமிழ்த் தலைவர்கள் முன் வர வேண்டும். கடந்த காலத் தவறு களை மீண்டும் இழைக்காதீர்கள்' என் றார்.

உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
“சங்கீத சங்கமம் 2023”

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# "தட்டிக் கழிக்கப்பட்டதை தொட்டுப் பார்க்கக் கூட தமிழ்மக்கள் தயாரில்லை" மைத்திரியின் கருத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சரியான பதிலடி!



பல தசாப்தங்களுக்கு முன்னர் தட்டிக் கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபையை தமிழ் மக்கள் தொட்டுப் பார்க்கக்கூட தயாராக இல்லை என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்இனம் தோற்று விட்டதாக யாருமே கருதக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வாக மாவட்ட அபிவிருத்தி சபையை பரிசீலிப்பது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் 29.நவ 2022 நாடாளுமன்றில் தெரிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை தீர்க்கும் வகையில், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக, மாகாணங் களின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. அதனை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் இதுஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும் என்பதையே நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம். அதுவே அனைத்து தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைச் சாத்தியமான வழி முறையாகவும் இருக்கின்றது.

இவ்வாறான சூழலில் 80களின் ஆரம்பத்திலேயே தமிழ் மக்களினால் ஏகோபித்த குரலில் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை தொடர்பாக பிரஸ்தாபிப்பதற்கு நாம் தயாராக இல்லை. 2009 ஆம் ஆண்டு இந்த நாட்டில் நிறைவடைந்த யுத்தம் என்பது, இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னர் சிலரால் முன்னெடுக்கப்பட்ட தவறான வழி முறைக்கு கிடைத்த தோல்வியாகவே அனைவரும் கருத வேண்டுமே தவிர, தமிழ் மக்கள் தோல்வியுற்ற சம்பவமாக அதனை யாரும் கருதக்கூடாடது.

தமிழ் மக்கள் மத்தியிலும், சிங்கள மக்கள் மத்தியிலும் இருக்கின்ற சில இனவாத சக்திகள், தங்களின் அரசியல் நலன்களுக்காக, தமிழ் மக்கள் தோல்வியடைந்து விட்டார்கள் என்ற கருத்தின் அடிப்படையில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இதுவே பிரச்சினைகள் இன்னும் தீராமல் இருப்பதற்கு காரணமாக இருக்கின்றது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்

எவ்வாறெனினும், தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாட்டினை தற்போதைய ஜனாதிபதி தெளிவாக புரிந்து வைத்திருக்கின்மை, பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரின் செயற்பாடுகளில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் மறுப்பு அறிக்கை!


மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்க ஜனாதிபதி தயாராகி வருவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 29 நவம்பர் 2022 பாராளுமன்றத்தில் தெரிவித்த பதில், அர்த்தத்தை சிதைக்கும் விதத்தில் பல ஊடகங்களில் செய்திகளாக வெளியாகியுள்ளன. எனினும், 2023ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில், பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள், மாகாண சபைகளில் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை (DDC) ஸ்தாபிக்கத் தயார் எனத் தெரிவித்தார். அது தவிர மாகாண சபைகள் கலைப்பு தொடர்பில் ஜனாதிபதி எந்த கருத்தையும் வெளியிடவில்லை.

நிறைவேற்றுத் தீர்மானங்களை அமுல் படுத்துவதில் அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையில் சரியான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்கான களமாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் செயற்படும் என்பதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் நிலைப்பாடாகும்.



அதன் மூலம், வளர்ச்சிப் பணிகள் முறையாக நடைபெறுவதுடன், நிதி வீண்விரயம் மற்றும் தாமதங்கள் தவிர்க்கப்படும்.


ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

16 நவம்பர் 2022 புதன்கிழமை முதல் ஐயப்பன் மண்டல பூஜை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஐயப்ப படிகட்டுப் பூஜை செய்ய விரும்பும் பக்தர்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

05 டிசம்பர் 2022 திங்கட்கிழமை:- பிரதோஷ விரதம்

07 டிசம்பர் 2022 புதன்கிழமை:- கார்த்திகை விளக்கீடு (சர்வாலயதீபம்)

உபயம்:- குலநாதன் வைரவநாதன் குடும்பம்

08 டிசம்பர் 2022 வியாழக்கிழமை:- விநாயகர் சஷ்டி விரதம் (பிள்ளையார் கதை ஆரம்பம்)

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தமிழீழம் எங்கும் பேரெழுச்சியுடன் நினைவேந்தல்




தாயக விடுதலைக்காகத் தம் இன்னுயிரை ஈந்த வீர மறவர்களுக்கு உயிர்க் கொடையாளர்களுக்குச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் தமிழர் தாயகமான தமிழ்ஈழம் எங்கும் பேரெழுச்சியுடன் உணர்வுபூர்வாக நடைபெற்றன வடக்குகிழக்கில் உள்ள அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்கள் மற்றும் பொது இடங்கள் 27 நம்பர் 2022 ஞாயிற்றுக் கிழமை மாலை கண்ணீரால் நனைந்தன.

வடக்கு கிழக்கில் மாவீரர் நாள் நிகழ்வுகளுக்குப் பொலிஸார், படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் தடைகளை ஏற்படுத்திய போதும் மக்கள் இவற்றைக் கண்டு அஞ்சாமல் வீர மறவர்களுக்குத் துணிவுடன் துயிலும் இல்லங்களுக்கும், பொது இடங்களுக்கும் சென்று சுடரேற்றினர்.

தாயகத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும் 27 நவ 2022 மாலை 6:05 மணிக்கு நினைவு ஒலி எழுப்பப்பட்டது. 6:06 இற்கு அகவணக்கம் செலுத்தப்பட்டது. 6:07 இற்கு ஈகச்சுடர் ஏற்றப்பட்டது.

அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களிலும், பொது இடங்களிலும் சமநேரத்தில் சுடர்கள் கொழுந்து விட்டு எரிந்தன. அந்த ஒளி வெள்ளத்தின் மத்தியில் மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுது தமது உறவுகளை நினைவு கூர்ந்தனர்.

யாழில் தீவகம் சாட்டி, கோப்பாய், கொடிகாமம், உடுத்துறை மாவீரர்துயிலும் இல்லங்களிலும், வல்வெட்டித்துறை தீருவில் திடல், நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவிடம்மற்றும் யாழ்.பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் வணக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்தில், கனகபுரம் விசுவமடு, முழங்காவில் ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும், மன்னார் மாவட்டத்தில், ஆட்காட்டிவெளி, பண்டிவிரிச்சான் ஆகிய மாவீரர் துயிலுமில்லங்களிலும் வணக்க நிகழ்வுகள் நடந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில், முள்ளியவளை, அளம்பில், ஆலங்குளம், வன்னிவிளாங்குளம், தேராவில் உள்ளிட்ட மாவீரர் துயிலுமில்லங்களிலும், வவுனியாவில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்திலும், வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஒழுங்கமைப்பில் வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்திலும் வணக்க நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில், மாவடி முன்மாரி, தரவை, வாகரை கண்டலடி ஆகிய மாவீர துயிலும் இல்லங்களிலும், தாண்டியடி சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பிரத்தியேக பகுதியிலும் வணக்க நிகழ்வுகள் இடம் பெறவுள்ளதோடு, அம்பாறையில் கஞ்சிகுடியாறு துயிலுமில்லத்திலும், திருகோணமலையில் ஆழங்குளம் மாவீரர் துயிலுமில்லத்திலும் வணக்க நிகழ்வுகள் இடம் பெற்றன.

# நினைவேந்தல் உரிமையை யாரும் தட்டிப் பறிக்கவே முடியாது என்கிறார் ஜனாதிபதி!



ஒவ்வொருவரும் தமது உயிரிழந்த அன்புக்குரிய உறவுகளை அமைதியாக நினைவுகூருவதற்கு முழு உரிமை உள்ளது எனவும் அதனை யாரும் தட்டிப் பறிக்க முடியாது' எனவும் சிறிலங்கா அதிபர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் பகிரங்கமாக மேற்கொள்ளப்படும் நிலையில், அதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கின்றதா என ஊடகமொன்று கேள்வி எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த போதே அதிபர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கை ஜனநாயக நாடு எனச் சுட்டிக்காட்டியுள்ள அதிபர், நினைவேந்தல் உரிமையை எவரும் தட்டிப் பறிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு இனமும் மரணித்த தமது உறவுகளை அமைதியாக நினைவேந்த முழு உரிமை உண்டு எனவும் இதைவிட வேறு எந்தக் கேள்வியும் தற்போதைய நிலைமையில் அவசியமற்றது எனவும் அதிபர் ரணில் விக்ரமசிங்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தமிழர் தேசத்துக் கல்வி மீண்டெழ ஆரம்பித்துள்ளது இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் பெருமிதம்!

தமிழர் தேசத்துக் கல்வி மீண்டெழ ஆரம்பித்துள்ளது என இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் க.பொ.த சாதாரண தர பரீட்சை முடிவுகள் வெளிவந்த நிலையில் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது கடந்த கால கல்வி வீழ்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கி விட்டோம்.

2021 க.பொ.த உயர்தர பெறுபேறுகள், 2021 க.பொ.த சாதாரண தர பெறுபேறுகள் கணிசமான மாற்றத்தை தந்துள்ளன. ஒப்பீட்டளவில் நாம் மீண்டெழ ஆரம்பித்துள்ளோம். இதனை நாம் எந்தச் சூழ்நிலையிலும் விட்டு விட முடியாது. இதற்காக பெற்றோர்கள், மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மிகுந்த அவதானத்துடனும் விழிப்புடனும் அக்கறையுடனும் தொழிற்பட வேண்டும்.

கடந்த 2021 க.பொ.த உயர்தர பெறுபேற்றுக்கு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை, அதிபர்களின் விடாமுயற்சி, பெற்றோர்களின் ஒத்துழைப்பு என்பன கணிசமான பங்கு வகித்தன. அதனாலேயே முதல் மூன்று இடங்களில் தமிழர் செறிந்து வாழும் மாகாணங்கள் முதல் நிலையில் வந்தன. அதேபோன்று 2021 க.பொ.த சாதாரண தர பெறுபேற்றுக்கும் ஆசிரியர்களின் அளப்பரிய சேவை, அதிபர்களின் சீரிய மனப்பாங்கு, பெற்றோரின் வகிபாகம் என்பன காரணமாக அமைகின்றன. தமிழர் செறிந்து வாழும் மாகாணங்களில் மாணவர்களுக்கான அரச பொதுப் பரீட்சைகளில் மாணவர்கள் எடுத்துள்ள பெறுபேற்று உயர்ச்சி எமக்கு மிகுந்த உற்சாகத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இதனை நாம் தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டும். இன்னும் மேலெழ வழி தேட வேண்டும். எத்தகைய நெருக்கடிகள், தலையீடுகள், கலாசார பிறழ்வுகள், போதை கலாசாரங்கள், திணிப்புகள் எது வந்தாலும் நாம் அனைத்தையும் தகர்த்தெறிய வேண்டும்.

கல்வி என்பது எமது சொத்து. அதனை நாம் கெட்டியாக பற்றிக் கொள்ள வேண்டும். அதுவே எமது வாழ்வின் ஆதாரம். அதற்காக அதிபர்கள் தாம் பொறுப்பேற்றுள்ள கல்விக் காப்பகத்தின் கண்ணியத்தையும், அங்கு காக்கப்படும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு அன்போடு அரவணைப்போடு அனைவரையும் ஒன்றிணைத்து, 'எமது இலக்கு ஒன்றே' என்ற வாசகத்தை மனதில் இருத்தி தொழிற்பட வேண்டும் என அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம். உங்களுக்கு எமது வாழ்த்துக்கள்! ஆயிரம் சுமைகள், துன்பங்கள். பல்வேறு நெருக்கடிகளையும் தாண்டி (22ம் பக்கம் பார்க்க)

# யார் அந்த மூன்றாந் தரப்பு

தமிழ் தேசியக் கட்சிகள், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பில் கலந்துரையாடியிருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தையொன்று தொடர்பில் ஆராய்ந்து வருகின்ற சூழலில் தான், இவ்வாறானதொரு சந்திப்பு இடம் பெற்றுள்ளது. இந்த சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. ஒரு வேளை காங்கிரஸ் கலந்து கொண்டாலும் கூட உருப்படியான பங்களிப்புக்களை வழங்குமாவென்பது கேள்விக்குறி தான்.

எவ்வாறெனினும், அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பில் தமிழ்தேசியக் கட்சிகள் தங்களுக்குள் கலந்துரையாடியிருப்பது வரவேற்க வேண்டியதொரு விடயமாகும். கொழும்பை எதிர்கொள்ளும் நோக்கில், தமிழ்க் கட்சிகள் தங்களை ஓர் அணியாக்கிக் கொள்வதும், தமிழர்கள் ஒரு தரப்பென்பதை அடையாளப்படுத்துவதும் முக்கியமானது. இந்த விடயத்தை ஈழநாடு தொடர்ந்தும் வலியுறுத்தி வந்திருக்கின்றது.

இந்த விடயத்தில் தமிழ்க்கட்சிகள் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பயணிக்க வேண்டும். தங்களுடைய சொந்த கட்ச 'நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவதை முற்றிலுமாக கைவிடவேண்டும்.

இந்த சந்திப்பின் போது மூன்றாம் தரப்பின் பங்களிப்பு தொடர்பிலும் பேசப்பட்டிருக்கின்றது. இலங்கைத் தீவின் இனப்பிரச்னை வரலாற்றில், மூன்றாம் தரப்பின் தலையீடுகள் புதிய விடயமல்ல. இரண்டு தடவைகள் மூன்றாம் தரப்பின் தலையீடுகள் நிகழ்ந்திருக்கின்றன. முதலாவது இந்தியாவின் தலையீடு. இரண்டாவது, நோர்வேயின் ஊடான மேற்குலக தலையீடு. மேற்படி இரண்டு தலையீடுகளின் போதும் தமிழர்களின் அரசியல் ஆயுதபலத்தை கொண்டிருந்தது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்து, மீண்டும் யுத்தம் ஏற்பட்டதை தொடர்ந்து, நோர்வேயின் தலையீடு முடிவுக்கு வந்தது.

ஆனால் இந்தியாவின் தலையீடு அப்படியல்ல. அது இப்போதும் எப்போதும் நிலைத்து நிற்கக் கூடிய இந்திய இலங்கை ஒப்பந்தத்தை கொண்டிருக்கின்றது. இன்றும் இந்தியா அந்த ஒப்பந்த அடிப்படையில் தான், இலங்கையின் உள்விவகாரம் தொடர்பில் அபிப்பிராயங்களை கூறி வருகின்றது. அபிப்பிராயங்களை கூறுவதற்கான சட்ட உரித்தை குறித்த ஒப்பந்தம் வழங்கியிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியப் படைகளுடன் இராணுவ ரீதியாக மோதியதைத் தொடர்ந்து, இந்தியா, ஈழத் தமிழர் விடயத்தில் தலையிடுவதை முற்றிலுமாக தவிர்த்திருந்தது. அதன் பின்னர், இந்தியாவை அணுகும் போது மட்டுமே, இந்தியா அபிப்பிராயங்களை கூறியிருக்கின்றது. இந்த அடிப்படையில் நோக்கினால், 1990 – 2009 வரையில், இந்தியா பிரத்தியேகமாக எந்தவொரு ஈடுபாட்டையும் காண்பித்திருக்கவில்லை.

நோர்வேயின் தலையீட்டுக் காலத்திலும் இந்தியா பார்வையாளராக மட்டுமே இருந்தது. ஆனால் இந்தியாவின் அதிருப்தியை சம்பாதித்துக் கொள்ளக் கூடாது, அவ்வாறானதொரு சூழல் ஏற்பட்டால், நிலைமைகள் சடுதியாக மாற்றமடைந்து விடும் என்பதை துல்லியமாக மதிப்பிட்டே, நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், ஒவ்வொரு விடயங்களையும் இந்தியாவிற்கு தெரியப்படுத்திக் கொண்டிருந்தார்.

இலங்கை விவகாரம் ஒரு சிக்கலான பிரச்னை, இதற்குள் ஒரு கட்டத்திற்கு மேல், நோர்வேயினால் பங்களிப்பை வழங்க முடியாதென்னும் அப்பிராயத்தையே இந்தியா கொண்டிருந்தது. மார்க் செல்டர் எழுதிய, ஒரு உள்நாட்டு யுத்தத்தின் முடிவுக்கு' என்னும் நூலில் இந்த விடயங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த பின்புலத்தில் நோக்கினால், இந்தியாவை தவிர்த்து எந்தவொரு மூன்றாம் தரப்பு தலையீடு செய்தாலும் கூட, அதனால் எந்தவொரு நன்மையும் கிடக்கப் போவதில்லை. இதுவரையான வரலாற்று அனுபவம் நமக்கு இதனையே உணர்த்துகின்றது. இந்த பின்புலத்தில் நோக்கினால், மூன்றாம்தரப்பு என்னும் பேச்சு வந்தால் தமிழர்களின் தெரிவு இந்தியா தான்.

ஒரு வேளை, இந்தியாவிற்கு சில சங்கடங்கள் இருப்பின் இந்தியாவின் பரிந்துரையில் பிறிதொரு தரப்பை அணுகலாம். அவ்வாறில்லாது, இந்தியாவை தவிர்த்து விட்டு செல்ல முற்பட்டால், ஒரு கட்டத்திற்கு மேல் எதுவும் நகராது. நோர்வேயின் மத்தி யஸ்த காலத்தில் கூட விடுதலைப் புலிகள் அமைப்பு இந்தியாவை முறையாக அணுகியதற்கு சான்றுகள் இல்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தான், நிலைமைகள் கையை மீறிச் செல்வதை உணர்ந்த அன்ரன் பாலசிங்கம், 2006இல், NDtv என்னும் இந்திய தொலைக் காட்சிக்கு நேர்காணலொன்றை வழங்கியதன் மூலம், இந்தியாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தார். (22ம் பக்கம் பார்க்க)

# தமிழ்மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு ரணிலிடம் கோரிய “றோ”

இலங்கை தமிழ் சிறுபான்மையினருக்கான சமஸ்டி தீர்வு உட்பட 1987 முதல் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றும் என இந்தியாவின் ரோ அமைப்பின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுக்கொண்டார் என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரோவின் தலைவர் சமந்குமார் கோல் இலங்கையில் வர்த்தக திட்டங்களின் மூலம் ஆழமாக கால்பதித்துள்ள சீனா தனது திட்டங்களை விஸ்தரிப்பதால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

மேற்குலகமும் இந்தியாவும் சீனாவிற்கு இராணுவ நிகழ்ச்சி நிரல் உள்ளதாக சந்தேகம் கொண்டுள்ளன எனினும் சீனா இதனை முழுமையாக நிராகரித்து வருகின்றது. இலங்கை சீனாவிற்கும் அமெரிக்கா ஜப்பான் அவுஸ்திரேலியா ஆகியநாடுகளை உள்ளடக்கிய இந்தியா தலைமையிலான சகாக்களிற்கும் இடையில் உருவாகி வரும் பூகோள அரசியல் பனிப்போரின் நடுவில் சிக்குண்டுள்ளன.

இந்திய பிரதமரை சந்திப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் மேற்கொண்ட மறைமுக முயற்சிகளின் மத்தியிலேயே இந்தியாவின் ரோவின் தலைவரின் விஜயம் இடம் பெற்றுள்ளது என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரோவின் தலைவர் சில வர்த்தக பரிமாற்றங்கள் உட்பட எஞ்சியுள்ள சில விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டார்.

இலங்யையின் வடக்குகிழக்கில் சீனாவின்





அதிகரித்து வரும் நடவடிக்கைகள் குறித்து அவர் கரிசனை வெளியிட்டார் என இந்த சந்திப்பு குறித்து விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 13வது திருத்தம் உட்பட இலங்கை அளித்த வாக்குறுதிகள் குறித்து அவர் கேள்வி எழுப்பினார் என மற்றுமொரு அரசாங்க தரப்பு தெரிவித்துள்ளது. தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட தயார் என ஜனாதிபதி கடந்த வாரம் தெரிவித்திருந்தார். ஜனாதிபதிக்கும் ரோவின் தலைவருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புகள் குறித்து கருத்து கேட்டவேளை ஜனாதிபதி செயலகம் அது குறித்து பதிலளிக்கவில்லை ரோவின் தலைவரின் இலங்கை விஜயத்திற்கான ஏற்பாடுகளை செய்யவில்லை என இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறான விஜயம் குறித்து தான் எதனையும் அறிந்திருக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய புலனாய்வு பிரிவின் தலைவரோ அல்லது வேறு எவரோ ஜனாதிபதியை சந்தித்தமை குறித்து எனக்கு எதுவும் தெரியாது என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன செவ்வாய்கிழமை வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார். (22ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாணய நிதியத்தின் முடிவு பாதகமாகவும் இருக்கலாம்

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவது வைத்தியரை நாடுவதை போன்றது என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார். அதனூடாக பெற்றுக் கொடுக்கப்படும் தீர்வுகள் சில சமயங்களில் விரும்பத்தகாததாக இருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். மேலும் கருத்துத் தெரிவித்த மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர், நிதி நல்லிணக்கத்தைப் பேணுவது இன்றியமையாதது என்றும், அதற்காக அரசியலமைப்பு ஏற்பாடுகள் போன்ற சட்ட காரணிகளால் நிதி முகாமைத்துவம் ஆதரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். இலங்கை மத்திய வங்கியை அபிவிருத்தி வங்கியாகக் கருதாது அதன் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்த வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



சர்வதேச நாணய நிதியம் ஆதரவளித்தாலும் இல்லா விட்டாலும் பொருளாதாரத்தை ஸ்திரப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார். அத்துடன் இலங்கையில் செயற்படுத்தப்பட்ட மானியத் திட்டத்திற்கு அதிகப் பணம் செலவழித்ததன் காரணமாக வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை மேலும் அதிகரித்தது இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் வளர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது என முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# தமிழ்த்தேசியக் கட்சிகளின் கூட்டத்தில் நடந்தது என்ன?



தமிழர்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வரும் வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வலியுறுத்துவது எனத் தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்தார்.

தமிழர்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்றும், எதிர் வரும் சுதந்திர தினத்துக்குள் அந்தத் தீர்வு வழங்கப்பட்டு 'ஒரு தாய் மக்க ளாக' இலங்கையர்கள் சுதந்திர தினத் தைக் கொண்டாடுவார்கள் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீண் டும் மீண்டும் தெரிவித்து வரும் நிலையில் தீர்வை நோக்கிய பயணத் தில் ஜனாதிபதியிடம் என்னென்ன விடயங்களை வலியுறுத்துவது என் பது தொடர்பில் பேச்சு நடத்துவத ற்குத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் பிரதிநிதிகளும் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் 25 நவ 2022 வெள்ளிக்கிழமை மாலை கூடினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் தலைமை யில் மாலை 5.30 மணி முதல் இரவு 8 மணி நடைபெற்ற இந்தக் கூட்டத் தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், ரெலோ அமைப் பின் தலைவர் செல்வம் அடைக்கல நாதன், புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல். எப்.பின் தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன், கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந் திரன் சி.சிறீதரன், எஸ்.வினோநோக ராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம் (ஜனா) ஆகியோர் கலந்து கொண் டனர்.

இந்தக் கூட்டத்தில் மூன்று முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. குறிப்பிட்டார்.

நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு அபகரிக் கப்பட்ட நிலங்கள் உடனடியாக விடு விக்கப்பட வேண்டும், அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அரசமைப்பு மற்றும் சட்டங்களை நடைமுறைப் படுத்தி மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட்ட வேண்டும், உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ் ந்து வந்த வடக்கு – கிழக்கில் சம ஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதி காரப் பகிர்வுடனான புது அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்களை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஓரணியில் நின்று எடுத்து ள்ளன.

இந்தத் தீர்மானங்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளின் திட்டவட்ட முடிவுகளாக ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது வலியுறுத்தப்படும்' என்றும் சுமந்திரன் எம்.பி. மேலும் கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதியுடனான பேச்சு நடைபெறும் வரையில் இடை யிடையே 'தமிழர்களுக்கான அரசியல் தீர்வு' தொடர்பில் ஒன்றுகூடி மேலதிக தீர்மானங்களை மேற் கொள்வது என்றும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளன. இதனடிப்படையில் இரண்டாவது கூட்டம் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லை.

அவருக்கு அழைப்பு விடுக்கப்படாத தால் தான் அவர் கலந்து கொள்ள வில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பேச்சு க்கு அழைக்கும் பொறுப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு வழங்கப்பட்டதால், 'கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு ஏன் அழைப்பு விடுக்கப்படவில்லை?' என்று ஏற்பாட்டாளர் மாவையிடம் கூட்டத்தின் போது வினவப்பட்டது.

அத்துடன் அடுத்த கூட்டத்தில் கஜேந் திரகுமாரை முறைப்படி அழைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டது.

# மாவீரர்களது தியாகங்கள் மதிக்கப்பட வேண்டுமானால் தமிழ்ப் பிரதிநிதிகள் இணைந்து பயணிக்க வேண்டும்!

மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் தனது இன்னுயிரை ஈகம் செய்த மாவீரர்களின் தியாகத்தை உண்மை யிலே மதிப்பதாக இருந்தால் தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் தமிழ் தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து பயணிக்க வேண்டும். இவ்வாறு ஜனநாயக போராளிகள் கட்சி யின் கொள்கை பரப்புச் செயலாளர் சாந் தன் தெரிவித்தார்.

ஜனநாயக போராளிகள் கட்சியினர் போராளிகளின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வை கடந்த 24 நவ 2022 வியா ழக்கிழமை வெல்லாவெளியில் நடத்தி னர்.

மட்டு.அம்பாறை தலைமையகத்தில் கட்சியின் உப தலைவர் என். நகு லேஷ் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஆரம்பத்தில் மாவீரர் களின் பெற்றோர்கள் மற்றவர்கள் சேர்ந்து கதறியழுத வண்ணம் ஈகைச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தி அக வணக்கத்தை மேற்கொண்டார்கள்.

அங்கு சாந்தன் மேலும் உரையாற்று

கையில் நாம் எமது மண்ணில் யாரு டைய அச்சுறுத்தல் இல்லாமல் சுதந்திர மாக எங்களை நாம் ஆளக்கூடிய ஒரு அதிகாரத்தை கோரி போராட்டத்தை நடத்தி வந்தோம். இந்த மக்கள் விடுத லைக்காக இந்த மண்ணின் விடுதலைக்காக எமது மாவீரர்கள் பல வடிவங்களில் தியாகங்களை செய்தார் கள். எனவே அந்த மாவீரர்களின் தியாகங்கள் வெற்றி பெற வேண்டுமாக இருந்தால் சுயாட்சியுடன் கூடிய ஒரு தீர்வை நாங்கள் எட்டவேண்டும்.

தமிழ் தேசிய பரப்பில் இருக்கக் கூடிய தமிழ் பிரதிநிதிகள் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாக பயணி க்க வேண்டும். நான் பெரிதா? நீ பெரிதா? என்று தூக்கிப் பிடித்துக் கொண்டு அலைய வேண்டாம். நீங்கள் கெட்டிக்காரர்களாக பலவான்களாக இருக்கலாம். ஆனால் எமது நோக்கங் கள் எல்லாம் ஒன்று என்பதை மறந்து விடக்கூடாது என்றார்.

இதேவேளை மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அமை க்கப்பட்ட மேடை உடைத்து தரை மட்ட மாக்கப்பட்டுள்ளதாக தரவை மாவீரர் துயிலும் இல்லஏற்பாட்டுக்குழு தலைவர் வி. லவகுமார் தெரிவித்தார்.

அத்துடன், ஜேர்மன் நாட்டிலிருந்து தரவை துயிலும் இல்லத்துக்கு நிதி கிடைப்பதாகக் கூறப்படும் தகவல் களும் முற்றிலும் உண்மைக்கு புறம் பானவை என்றும் அவர் தெரிவித் துள்ளார். மாவீரர் துயிலும் இல்லத்தில் மேடை சிலரால் உடைக்கப் பட்டது கண்டனத்துக்கு உரியது என்றார்.

# இலங்கையில் விசா கட்டணங்கள் அதிகரிப்பு

இலங்கை குடிவரவு மற்றும் குடிய கல்வுத் திணைக்களம் வீசாக்களுக் கான கட்டணங்கள் மற்றும் ஏனைய கட்டணங்களை அதிகரித்துள்ளது.

2023 வரவுசெலவுத் திட்டத்தின்படி, டிசம்பர் முதலாம் திகதி முதல் அமு லுக்கு வரும் வகையில் இந்த அதிக ரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பான விசேட அறிவிப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டா ளரால் வெளியிடப்பட்டுள்ளது. இதன் படி, இரட்டைக் குடியுரிமை வழங்கு வதற்கான கட்டணம் 2,000 அமெ ரிக்க டொலர்களாக திருத்தப்பட்டு ள்ளது.

இரட்டைக் குடியுரிமை பெறும் 22 வயதுக்குட்பட்ட மனைவி அல்லது குழந்தைக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவதற்கான கட்டணம் 500 டொலர்களாக திருத்தப்பட்டுள்ளது.

குடியுரிமையின் கீழ் வழங்கப்படும் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்கான கட்ட ணம் 2,000 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுக்கு ஒன்லைனில் மின்னணு பயண அங்கீகாரத்தைப் பெறுவதற்கான கட்டணம் 50 டொல ராகவும் வணிகங்களுக்கு 55 டொல ராகவும் திருத்தப்பட்டுள்ளது.

இலங்கையர் அல்லாத வாழ்க்கைத் துணையை சார்ந்திருக்கும் குழந் தைகளுக்கான வீசா வழங்குவதற்கான கட்டணம் 150 டொலராக இருக்கும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# நல்லூரில் தேசியத் தலைவரது பிறந்த தினத்தை இனிப்புக் கொடுத்து கொண்டாடி மகிழ்ந்த யாசகர்



யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் முன்பாக யாசகம் பெறும் ஒருவர் 26 நவம்பர் 2022 சனிக்கிழமை விடுதலைப்புலிகளின் தலைவர் 68வது பிறந்ததினத்தை இனிப்பு கொடுத்து கொண்டாடி மகிழ்ந்தார்.

குறித்த யாசகர் குடும்பம் சரியான வறுமையில் இருக்கையிலும், தனது சொந்த செலவில் இனிப்புகளை வாங்கி ஆலயத்திற்கு வருகை தருவோருக்கு மன ஆனந்தத்தோடு கொடுத்து மகிழ்ந்திருந்தார்.

விடுதலைப்புலிகளின் தலைவரின் 68வது பிறந்ததினம் தமிழர் தாயகம் முழுவதும் வருடா வருடம் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# இனப்பிரச்சனைக்குத் தீர்வாக 13 பிளஸ் வழங்க வேண்டும் - டிலான் பெரேரா! காணி, பொலிஸ் அதிகாரங்கள் தமிழருக்குக் கொடுக்கக்கூடாது - சரத் வீரசேகர

நாட்டின் தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வாக 13 பிளஸ் முறைக்கு கட்டாயம் செல்லவேண்டும். அவ்வாறு 13 பிளஸ் திட்டத்துக்கு செல்லும் போது ஒற்றையாட்சி அல்லது ஐக்கிய இலங்கை என்ற வசனங்களில் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக எவ்வாறான அதிகாரப் பகிர்வு எமக்குக் கிடைக்கிறது என்பதையே இங்கு பார்க்க வேண்டும் என்று பொது ஜன பெரமுனவிலிருந்து பிரிந்து சுயாதீனமாக செயற்படும் சுதந்திர மக்கள் காங்கிரஸின் பிரதிநிதி பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

இது தொடர்பில் வினவியபோதே பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இந்த விடயத்தை சுட்டிக் காட்டினார். அவர் மேலும் தெரிவிக்கையில் - இனப்பிரச்னைக்கு தீர்வாக 13 பிளஸ் திட்டத்தின் ஊடாக தீர்வு காண்பதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பம் தற்போது கிடைத்திருக்கிறது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இதற்கு இணக்கம் தெரிவித்திருக்கின்றார். எனவே இந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனால் இந்த நோக்கம் உண்மையானதாக இருக்கவேண்டும்.

இது வரவு - செலவுத் திட்டத்திற்கு வாக்குகளை பெற இனப்பிரச்னை தீர்வுக்கு 13 பிளஸ் கட்டாயமானது! வலியுறுத்துகிறார் டிலான் பெரேராறுக் கொள்வதற்கான ஒரு அணுகுமுறையாக அமையக்கூடாது. தற்போது தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு ஒரு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரம



சிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். இது ஒரு சிறந்ததொரு யோசனையாக காணப்படுகிறது.

ஆனால் இது உண்மையில் நேர்மையானதாக இருக்க வேண்டும். ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க வரவு - செலவுத் திட்டத்திற்கு கூட்டமைப்பின் வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக இப்படி ஒரு அணுகு முறையை முன்னெடுக்கக் கூடாது.

மாறாக உண்மையிலேயேபிரச்னையை தீர்ப்பதற்கான முயற்சி இதனூடாக இடம் பெறவேண்டும். ஆனால் எப்படியோ இந்த இடத்தில் 13 பிளஸ் திட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த இணக்கம் தெரிவித்தார். அப்படியானால் தற்போது 13 பிளஸ் ஊடாக இந்த பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு ஒருசிறந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே 13 பிளஸ் என்ற அடிப்படையில் அதிகாரப் பகிர்வை



நோக்கிச் செல்லும் போது ஒற்றையாட்சி ஐக்கிய இலங்கை என்று வசனங்களில் தொங்கிக் கொண்டிருக்கக்கூடாது. அதே போன்று ஐக்கியம் என்ற வசனத்தில் வடக்கு - கிழக்கு தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது. மாறாக எவ்வாறான ஒரு அதிகாரப் பகிர்வு எமக்குக் கிடைக்கிறது என்பது தொடர்பாகவே இங்கு சென்று பார்க்கவேண்டும்.

ஆனால் ஒற்றையாட்சி என்ற தொங்கினால் 13 பிளஸ்என்ற திட்டத்திற்கு செல்ல முடியாது. எனவே இங்குஏதோ ஒரு முறையிலான ஒரு அணுகுமுறைக்கு அல்லது ஒரு திட்டத்துக்கு அனைவரும்செல்ல வேண்டும்.

13 பிளஸ் எனும்போது அதில் ஒரு புதிய விடயம் இணையவேண்டும். அந்தபுதிய விடயமாக செனட் சபையை இணைத்துக் கொள்ளமுடியும் என நான் கருதுகிறேன். அதாவது தற்போது இருக்கின்ற பாராளுமன்றத்துக்கு மேலதிகமாக மேலும் ஒரு சபையை உருவாக்கி அதில் மாகாண சபைகளின் உறுப்பினர்களை கொண்ட பிரதிநிதிகள் அங்கத்து வம் பெறமுடியும்.

இதனூடாக மக்களின்பிரச்னைகளுக்கு தீர்வு காணமுடியும். மக்களின் உரிமைகளை பாதுகாக்க முடியும்.எனவே 13ஆவது திருத்தத்தின் ஊடாக செனட் சபையையும் இணைத்துக் கொள்ள முடியும் என்பதே எனது நிலைப்பாடு அமைந்திருக்கின்றது என்றார்.

இதேவேளை பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு நாட்டை பிளவுபடுத்த இடமளிக்க மாட்டோம் என பொதுஜன பெரமுன்பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த 29 ஆயிரம் வீரர்களின் தியாகத்தை மலினப்படுத்த போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைவரம் குறித்து கருத்து வெளியிட்ட அவர், அதிகாரப் பகிர்வு என்பது சாத்தியமற்றது. அரசியல் மற்றும் இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு தமிழ்அரசியல் தலைமைகள் தங்களை வளப்படுத்திக் கொள்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்பட்டபோதும் அந்த உரிமைகளை தமிழ் தலைமைகள்பாதுகாத்துக் கொள்ளவில்லை. மேலும் வடக்கு கிழக்கிற்கு அதிகாரங்களை விஷ்தரித்தாலும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே காணப்பட வேண்டும் என்றார்.

நாட்டின் இறையாண்மையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே நாட்டு மக்கள் பொதுஜன பெரமுனவிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை வழங்கினார்கள். பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தற்போது செயற்பாட்டில் உள்ள போது நாட்டு மக்கள் வழங்கிய ஆணை எவ்வாறு வலுவற்றதாகும், ஆகவே மக்கள் வழங்கிய ஆணையை மதித்து அரச தலைவர்கள் செயற்பட வேண்டும்.

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# யாழ்ப்பாணத்தின் அதிசயமான நிலாவரையில் எதற்காக இராணுவம்?

## இது நம்ம யாழ்ப்பாணம் 8

யாழ்.நகரில் இருந்து
ஈழநாட்டிற்காக - பகிரதன் -

வரலாற்றுத் தொன்மையையும், இயற்கையின் அதிசயங்களையும் வைத்துக் கொண்டு அமைதியாக இருக்கும் யாழ்ப்பாணத்தின் நிலாவரைப் பகுதி அண்மைக் காலத்தில் சர்ச்சைக்குரிய ஒன்றாக மாறி விட்டது. தொல்பொருள் திணைக்களம் இந்தப் பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்ள முற்பட்டதையடுத்தே சர்ச்சை உருவாகியது. இதற்கு அனுமதிப்பதில்லை என்ற வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உறுதியான நிலைப்பாடு இந்தப் பகுதியில் மோதல் நிலை ஒன்றை உருவாக்கியிருந்ததை கடந்த வருட இறுதியில் பார்த்தோம்.

கடந்த வருடம் இரண்டு தடவை இந்தப் பகுதி போர்க்களமான நிலையில், அரசாங்கமும் அமைதியான முறையில் மக்களின் கவனம் பொருளாதாரப் பிரச்சினையின் பக்கம் உள்ள நிலையைப் பயன்படுத்தி காய்களை நகர்த்தி வருகின்றது. இது குறித்து தமிழ்கட்சிகளின் கவனம் ஏன் இன்னும் திரும்பவில்லை என்பதும் தெரியவில்லை. அடுத்த சுதந்திர தினத்துக்கு முன்னர் இனநெருக்கடிக்குத் தீ◌ாவு என அறிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசுவதற்கு என்னத்தைக் கொண்டு செல்வது என்பதில் தான் தமிழ்க் கட்சிகளின் கவனம் முழுமையாக உள்ளதோ தெரியவில்லை.

நிலாவரை கிறை அடுத்துள்ள பகுதியில் இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டு, இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதை கடந்த வாரம் அந்தப் பகுதியால் சென்ற போது அவதானிக்க முடிந்தது. உல்லாசப் பயணிகள் அதிகளவுக்கு வந்து செல்லக் கூடிய இந்தப் பகுதியில் இராணுவ முகாம் எதற்காக என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்றது. இந்தப் பகுதி அமைதியாகக் காணப்பட்டாலும், இந்த அமைதிக்குள் பூகம்பம் ஒன்று புகைந்து கொண்டிருப்பதைத் தான் இராணுவ முகாம் அமைக்கப்பட்ட இந்தச் சம்பவம் வெளிப்படுத்துகின்றது.

யாழ்ப்பாணத்தில் உல்லாசப் பயணிகளைக் கவரும் பகுதிகளில் நிலாவரையும் ஒன்று. கொரோனா பரவலால் ஒன்றரை வருடத்துக்கு மேலாக நிலாவரை வெறிச்சோ சாடிப்போய்க் கிடந்தது. இப்பகுதிக்கு உல்லாசப் பயணிகள் யாரும் அந்தக்காலத்தில் வருவதில்லை. தென்பகுதியிலிருந்து வரும் சிங்கள உல்லாசப் பயணிகள் கூட அதிகளவுக்கு வந்து செல்லும் ஒரு பகுதியாக நிலாவரை இருந்தது. ஆனால், வரலாற்று ரீதியான சர்ச்சை ஒன்றுக்குள் இப்போது நிலாவரை சிக்கிக் கொண்டுள்ளது. இந்தப் பின்புலத்தில்தான் இப்போது அங்கு இராணுவம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

### தொல்பொருள் ஆய்வு

கடந்த வருட முற்பகுதியில் - ஜனவரி 21ஆம் திகதிதான் நிலாவரையில் அமைதியைச் சீர்குலைத்த அந்த முதலாவது சம்பவம் இடம் பெற்றது. தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் முன்னறிவித்தல் எதுவும் இல்லாமல் அந்தப் பகுதியில் வந்திறங்கினார்கள். நிலாவரைக் கிணற்றை அடுத்துள்ள பகுதியில் கிடங்குகளை வெட்டி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள முற்பட்டார்கள். ஆய்வுப்பணி என்ற பெயரில் அவா◌்கள் உண்மையில் என்னத்தைச் செய்ய முற்பட்டார்கள் என்பது தெரியவில்லை. அப்போதுத ான், நிலாவரைப் பகுதியும் பதற்றம் நிறைந்ததாக மாற்றமடைந்தது.

இலங்கையில் தொல்பொருள் திணைக்களத்தில் செயற்பாடுகள் குறித்து தமிழ் மக்களுக்கு ஏற்கனவே சந்தேகங்கள் உள்ளன. வன்னியிலும், கிழக்கு மாகாணத்திலும் தொல்லியல் திணைக்களம் கால் வைக்கும் இடங்கள், பௌத்த - சிங்கள இடங்களாகக் காட்டப்படுவது கடந்த கால நிகழ்வு. அதனை நிரூபிப்பதற்குத் தேவையான ஆதாரங்கள் இருப்பதாக அவர்கள் பின்னர் பிரகடனப் படுத்துவார்கள். அதற்காகத் தான் அகழ்வுகளை அவர்கள் மேற்கொள்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டு தமிழ்த் தரப்பினரால் முன் வைக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்ப் பகுதிகளை சிங்கள - பௌத்த மயமாக்குவதற்கு அரச இயந்திரம் கண்டுபிடித்துள்ள குறுக்கு வழிதான் இந்தத் தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வாராய்ச்சி என தமிழ் அரசியல்வாதிகள் குற்றச் சாட்டுக்களை முன் வைக்கின்றார்கள். இந்தக் குற்றச் சாட்டிலூ நிறைய உண்மைகளும் உள்ளன. இந்தப் பின்னணியில் தான், நிலாவரைப் பகுதியில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் ஆய்வை மேற்கொள்ள முற்பட்டமை தமிழ் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. வட பகுதிக்கான தொல்பொருள் திணைக் களத்தின் பணிப்பாளர் நளின் வீரரட்ண தலைமையில் 5 அதிகாரிகள் நிலாவரை கிணற்றை உள்ளடக்கிய காணிக்குள் வந்திறங்கி ஆய்வுகளை மேற்கொள்ள முற்பட்டனர்.

### மக்கள் எதிர்ப்பு

தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் நிலாவரைப் பகுதியில் கிடங்கு வெட்டி அகழ்வுப் பணியை ஆரம்பிக்க முற்பட்ட போது, அரசியல்வாதிகள் தலைமையில் அங்கு வந்து குவிந்த பொதுமக்களால் தடுக்கப்பட்டனர். வலி கிழக்கு பிரதேச சபைத் தலைவர் நிரோஷ் தியாகராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் இதில் முன்னணியில் நின்றார்கள். நிலாவரைக் கிணறு தொல்பொருள் திணைக்களத்துக்குரியதாக இருந்தாலும், அந்தப் பகுதியைப் பராமரிப்பதற்கான பொறுப்பு வலி கிழக்கு பிரதேச சபைக்குரியதாகும். பிரதேச சபைத் தலை ஷவர் நிரோஷ் தியாகராஜாவுக்குக் கூட தெரிவிக்காமலேயே தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அங்கு வந்திருந்தார்கள்.

அப்பகுதியில் கிடங்குகளை வெட்டத் தொடங்கியிருந்த தொல்பொருள் திணைக்களத்தினர், பொதுமக்கள் குவிந்த நிலையில், அப்பகுதியை சுத்திகரிப்பது - பராமரிப்பது தான் தமது நோக்கம் என பொருத்தமற்ற ஒரு காரணத்தை முன்வைத்தார்கள். கொரோனா தீவிரமாகப் பரவிவரும் ஒரு காலத்தில் அவர்கள் சொன்ன காரணம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை. பொது மக்களுடைய கடுமையான எதிர்ப்பினால் அவர்கள் அங்கிருந்து திரும்பிச் செல்லவேண்டியிருந்தது.

இது தொடர்பாக வலி கிழக்கு பிரதேச சபைத் தலைவர் நிரோஷ் தியாகராஜாவிடம் கேட்ட போது, 'நிலாவரை கிணறு தொல்பொருள் திணைக்களத்தினால் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தது என வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அதனையடுத்துள்ள பகுதிகள் எமது பிரதேச சபையினால் தான் பராமரிக்கப்பட்டு வருகின்றது. அருகேயுள்ள சிவன் கோவிலுக்குச் சொந்தமான காணியாகத் தான் இந்தக் காணி இருந்து வருகின்றது.



இதற்கான ஆதாரங்களை நாங்கள் நீதிமன்றத்திலும் சமர்ப்பித்திருக்கின்றோம். இந்த நிலையில், இந்தப் பகுதியை சிங்கள பௌத்த மயமாக்கும் நோக்குடன்தான் இங்கு பல சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன. இந்தப் பகுதியில் நிர்வாக ரீதியாக எனக்குள்ள அதிகாரங்களின் அடிப்படையில்தான் இங்கு என்ன நடைபெறுகின்றது என நான் அறிய முற்பட்டேன்' எனத் தெரிவித்தார். இதனையடுத்து பொது மக்களும் இணைந்துகொண்டு தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகளை தடுத்தமையால் அவர்கள் அங்கிருந்து வெளியேறினார்கள்.

### இருந்து

இதனையடுத்து கடந்த மார்ச் 26 ஆம் திகதி மீண்டும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் இப்பகுதிக்கு வந்தார்கள். மீண்டும் ஆய்வுப் பணிகளை ஆரம்பிக்க வலி கிழக்கு பிரதேச சபைத் தலைவர் தலைமையில் அவ்விடத்தில் குவிந்த பொதுமக்கள் அவர்களைத் தடுத்தார்கள். தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபடுவதாகத் தெரிவித்து, பிரதேச சபைத் தலைவர் எதிர்ப்பை வெளிப்படுத்தினார். இதனையடுத்து, பிரதேச மக்களும் அங்கு கூடிய நிலையில் அங்கு மீண்டும் அமைதியின்மை ஏற்பட்டது.

பொலிஸார் தலையிட்டு அமைதி நிலையை ஏற்படுத்திய அதேவேளையில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளும் அந்த இடத்திலிருந்து வெளியேற வேண்டியிருந்தது. தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கைகளை எதற்காக எதிர்க்கின்றீர்கள் என நிரோஷ் தியாகராஜாவிடம் கேட்டபோது, 'தமிழ்ப் பகுதிகளில் தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள் எப்போதும் மர்மமானதாகவும், சூட்சுமமானதாகவுமே இருக்கின்றது. அந்த வகையில் தான் இதனை நாங்கள் எதிர்க்கின்றோம். ஏனெனில் தொல்பொருள் திணைக் களத்தின் கடந்த கால வரலாறுகளைப் பார்க்கும் போது அவர்கள் இனங்களுடைய வரலாற்றைத் திரிவுபடுத்தும் வகையில் செயற்பட்டிருக்கின்றார்கள். அல்லது பௌத்த விகாரைகளை அமைத்து ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கின்றார்கள். இவ்வாறான சூ ழ்நிலையில், நிலாவரையில் என்ன செய்வதற்கு முற்பட்டுள்ளீர்கள் என்பதை வெளிப்படுத்துங்கள் என அவர்களிடம் கேட்டோம். அது தொடர்பாக மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் உரிய அனுமதியைப் பெற்றுக் கொண்டு அதனைச் செய்யுங்கள் என்பது தான் எனது கோரிக்கை' என உறுதியாகச் சொன்னா◌ா நிரோஷ்.

ஆனால், மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டங்களில் அதற்கான அனுமதியைப் பெறுவதற்கு தொல்பொருள் திணைக் களம் முற்படுவதில்லை என்ற குற்றச் சாட்டையும் நிரோஷ் தியாகராஜா அப்போது முன்வைத்திருந்தார்.

இந்தப் பின்னணியில் இராணுவ முகாம் ஒன்று இங்கு திடீரென அமைக்கப் பட்டிருப்பதன் பின்னணி குறித்து சந்தேகங்கள் எழுவது தவி◌ாக்க முடியாததாகவே உள்ளது. பொருளாதார நெருக்கடிக்குள் நாடும், மக்களும் சிக்கித் தவிக்கும் நிலையில் மற்றொரு நகர்வை அரசாங்கம் முன்னெடுக் கப்போகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

இந்த நிலையில் நிலாவரையின் முக்கியத்துவம் குறித்தும், அதனை அபகரிக்கும் அரசின் நோக்கத்தின் பின்னணி தொடர்பாகவும் அடுத்த வாரம் இது நம்ம யாழ்ப்பாணம் பகுதியில் பார்ப்போம்.

உங்கள் அபிமான ஈழநாடு
பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
"சங்கீத சங்கமம் 2023"

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! டிசம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

26 நவம்பர் 2022 முதல் 02 டிசம்பர் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

## மேலதிக விபரங்களுக்கு:-

## ஈழநாடு பரமேஸ் 416 841 9600


## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### Dr ஜெயதேவி முத்துலிங்கசுவாமி

கொழும்பைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த டாக்டர் ஜெயதேவி முத்துலிங்கசுவாமி அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 30 நவம்பர் 2022 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். டாக்டர் ஜெயதேவி முத்துலிங்கசுவாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சின்னத்துரை ஸ்ரீகாந்தராசா

யாழ்ப்பாணம் இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டி ருந்த திரு சின்னத்துஜர ஸ்ரீகாந்தராசா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 03 டிசம்பர் 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சின்னத்துரை ஸ்ரீகாநதராசா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி





### திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா

யாழ்ப்பாணம் நல்லூரடியைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களின் 35வது ஆண்டு நினைவுநாள் 05 டிசம்பர் 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது பிள்ளைகள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி தனலெட்சுமி இராஜேந்திரராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி

## 1வது ஆண்டு நினைவஞ்சலி




### திரு வீரகத்தி கதிர்காமு

### திருமதி கதிர்காமு தங்கம்மா

பேராலை பளையைச் சேர்ந்தவர்களான திரு வீரகத்தி கதிர்காமு அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளும் திருமதி கதிர்காமு தங்கம்மா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளும் 01 டிசம்பர் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வீரகத்தி கதிர்காமு திருமதி கதிர்காமு தங்கம்மா இணையர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




26 நவம்பர் 2022 சனிக்கிழமை பிறந்த நன்நாள் அன்பளிப்பாக "விதைகள்" **Planting Future VTN - Canada** அமைப்பினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




26 நவம்பர் 2022 சனிக்கிழமை பிறந்த நன்நாள் அன்பளிப்பாக "விதைகள்" **Planting Future VTN - Canada** அமைப்பினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




26 நவம்பர் 2022 சனிக்கிழமை பிறந்த நன்நாள் அன்பளிப்பாக "விதைகள்" **Planting Future VTN - Canada** அமைப்பினர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



23 நவம்பர் 2022 புதன்கிழமை துன்னாலை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருக்கும் திருமதி தம்பையா சின்னம்மா அவர்களது 87வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திருமதி தம்பையா சின்னம்மா அவர்கள் 26 நவம்பர் 2022 அன்று அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 நவம்பர் 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி பத்மா கலைஞானம் அவர்களது 66வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி பத்மா கலைஞானம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




27 நவம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு இராசையா கோணேஸ்வரன் குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




27 நவம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை "விதைகள்" **Planting Future VTN - Canada** அமைப்பினர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



27 நவம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை "விதைகள்" **Planting Future VTN - Canada** அமைப்பினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




27 நவம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை "விதைகள்" **Planting Future VTN - Canada** அமைப்பினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




28 நவம்பர் 2022 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு சிவநாயகம் சிற்றம்பலம் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




30 நவம்பர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு நகுலேஸ்வரன் கிருஷ்ணமூர்த்தி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திரு நகுலேஸ்வரன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



30 நவம்பர் 2022 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு நகுலேஸ்வரன் கிருஷ்ணமூர்த்தி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திரு நகுலேஸ்வரன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



30 நவம்பர் 2022 புதன்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்டிருந்த **Dr** ஜெயதேவி முத்துலிங்கசுவாமி அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



01 டிசம்பர் 2022வியாழக்கிழமை பேராலை பளைச் சேர்ந்தவர்களான திரு வீரகத்தி கதிர்காமு அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி கதிர்காமு தங்கம்மா அவர்களது 1வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



26 ஒக்டோபர் 2022 கனடாவில் வசிக்கும் திரு திருமதி பீற்றர் ஆன் தம்பதிகளின் செல்வப்புதல்வன் எரின்டனின் 12வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக செல்வன் எரின்டன் தனது பெற்றோர்களுடன் இணைந்து 02 டிசம்பர் 2022 வெள்ளிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

# எங்கள் தேசத்தில் மாவீரர் நினைவேந்தல்


முள்ளியவளை


வடமராட்சி எள்ளங்குளம்


வடமராட்சி கிழக்கு உடுத்துறை


மன்னார் ஆட்காட்டிவெளி


கொடிகாமம்


கோப்பாய்


திருகோணமலை - சம்பூர் ஆலங்குளம்


மட்டக்களப்பு தரவை


யாழ்ப்பாணம், நல்லூர்


யாழ்.தமிழரசு கட்சி அலுவலகம்


ஈச்சங்குளம்


மன்னார் பண்டிவிரிச்சான்


கொக்கட்டிச்சோலை மாவடிமுன்மாரி


முள்ளிவாய்க்கால் துயிலுமில்லம்


முழங்காவில்


மட்டக்களப்பு தாண்டியடி


தேராவில் விசுவமடு


முல்லைத்தீவு நகர கடற்கரை

# அரசியல் கைதிகளும் தமிழ் மக்களும்

முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிக்காவைக் கொலை செய்ய முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இருபத்திமூன்று ஆண்டுகளாக சிறையில் வைக்கப்பட்டிருந்த இந்து மதகுருவான ரகுபதி சர்மா அண்மையில் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

அவரோடு சேர்ந்து கைது செய்யப்பட்ட அவருடைய மனைவி வசந்தி சுமார் 15 ஆண்டுகளின் பின் குற்றமற்றவர் என்று நீதிமன்றினால் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டு விட்டார். ரகுபதி சர்மா இப்பொழுது இரத்மலானையில் உள்ள உள்ள இந்துமா மன்றத்துக்கு சொந்தமான ஒரு கட்டிடத்தில் தங்கியிருக்கிறார். அவர் கைது செய்யப்பட்ட காலத்திலிருந்து அவர் விடுதலையாகும் வரையிலும் அதற்கு பின்னரும் இந்து மாமன்றம் அவருக்கு பல விதங்களிலும் உதவி வருகிறது.

கைது செய்யப்படுகையில் அந்த ஐயரும் அவருடைய மனைவியும் இளம் தம்பதிகளாக இருந்தார்கள். அப்போதிருந்த அரசியல் சூழலில் அவர்களோடு சேர்ந்து தங்களை அடையாளப்படுத்த உறவினர்களும் விரும்பவில்லை. விடுவிக்கப்பட்ட வசந்தி சர்மா தனது பிள்ளைகளோடு வெளிநாட்டில் வசித்து வருகிறார். இப்பொழுதும் தனித்து விடப்பட்டிருக்கும் ஐயரை இந்து மாமன்றம் பராமரிக்கின்றது.

அவரைப் போல பல அரசியல் கைதிகள் சிறையில் இருந்த காலத்தில் அவர்களுடைய குடும்பங்கள் தனித்து விடப்பட்டன. உறவினர்களின் மனநலம் பாதிக்கப்பட்டது. குடும்பத்துக்குள் அமைதி குலைந்தது. சில குடும்பங்கள் பிரிந்தன. சில உறவினர்கள் மருந்தில் தங்கியிருக்கும் அளவுக்கு அவர்களுடைய மனநலம் கெட்டது. விடுவிக்கப்பட்ட எல்லா அரசியல் கைதிகளுக்கும் பொருத்தமான உதவிகள் பொருத்தமான நேரத்தில் கிடைத்தன என்று கூற முடியாது. இது விடயத்தில் தமிழ் மக்கள் மத்தியில் பொருத்தமான கட்டமைப்புகள் இருப்பதாக தெரியவில்லை.

அண்மை ஆண்டுகளில் ஒப்பீட்டளவில் அதிகரித்த அளவில் கைதிகள் விடுவிக்கப்பட்டு வருகிறார்கள். இதில் அதிக தொகை கைதிகளுக்கு (16) பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தது கோட்டாபய ராஜபக்ஷ தான் என்பது ஒரு சுவாரஸ்யமான முரண். மேலும் தம்மை கொல்ல முயன்றதாக குற்றம் சாட்டப்பட்ட கைதிகளை விடுவிப்பதில் முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேனவும்,சந்திரிகா குமாரரரணதுங்கவும் கைதிகளுக்குச் சாதகமாக நடந்து கொண்டார்கள்.

இப்பொழுது அரசியல் கைதிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகிறார்கள். மொத்தம் 33 கைதிகள் இப்பொழுதும் சிறையில் உள்ளார்கள். அவர்களில் இருவர் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்கள்.

அரசியல் கைதிகளுக்காக தொடக்கத்தில் இருந்தே போராடியது அருட்தந்தை சக்திவேல் தலைமையிலான அரசியல் கைதிகளுக்கான தேசிய அமைப்பாகும். அண்மை ஆண்டுகளாக மற்றொரு அமைப்பு குரலற்றவர்களின் குரல்'' என்ற பெயரில் இயங்கி வருகிறது. இது அரசியல் கைதியாக இருந்து விடுவிக்கப்பட்ட கோமகனின் தலைமையில் இயங்குகின்றது. இந்த அமைப்பில் விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகளும் அரசியல் கைதிகளின் உறவினர்களும் செயற்பாட்டாளர்களும் இணைந்து செயல்படுகிறார்கள்.

இப்பொழுது அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டு வரும் ஒரு காலச் சூழலில் விடுவிக்கப்பட்ட கைதிகளின் அடுத்த கட்ட வாழ்க்கையை பாதுகாப்பானதாகவும் நிம்மதியானதாகவும் அமைத்துக் கொள்ளத்தக்க உதவிகள் அவர்களுக்கு தேவை.

தமிழ்ச் சமூகம் இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். அதற்குப் பொருத்தமான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்.




அரசியல் கைதிகளின் விடயத்தில் குரலற்றவர்களின் குரல் அமைப்பானது அண்மை காலங்களில் துடிப்பாகச் செயல்பட்டு வருகிறது. கைதிகளை எதுவிதத்திலாவது விடுவிப்பதே இவ்வமைப்பின் குறிக்கோளாகும். விடுவிக்கப்பட்ட கைதிகளின் நலன்களைக் கவனிப்பதற்கு அந்த அமைப்பிடமும் போதிய வளங்கள் இல்லை.

புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் சிலவும் தனி நபர்களும் அவ்வாறு விடுவிக்கப்பட்ட கைதிகளுக்கு உதவி வருகிறார்கள். குறிப்பாக தோழமைக் கரங்கள் என்ற புலம் பெயர்ந்த தமிழர் அமைப்பு கைதிகளுக்கு உதவி வருகிறது. அண்மையில் லைக்கா குழுமத்தின் தலைவர் சுபாஸ்கரன் பொது மன்னிப்பின் மூலம் விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகள் ஒவ்வொருவருக்கும் 25 லட்சம் ரூபாய்கள் வழங்கியிருந்தார். விடுவிக்கப்பட்ட கைதிகள் அல்லது புனர்வாழ்வின்பின் விடுவிக்கப்பட்ட முன்னாள் இயக்கத்தவர்களுக்கு இதுவரை உலக நிறுவனங்களால் வழங்கப்பட்டிருக்கக் கூடிய இழப்பீட்டுத் தொகை எல்லாவற்றிலும் இது மிகப் பெரியது.




இது ஒரு மிகச் சிறந்த முன்னுதாரணம். புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பில் இருக்கும் பெரு முதலாளிகளும் நிறுவனங்களும் அறக்கட்டளைகளும் தனி நபர்களும் இதுபோன்ற விடயங்களில் எவ்வாறு பொருத்தமான விதங்களில் உதவி செய்யலாம் என்று சிந்திக்க வேண்டும்.

தாயகத்தை நோக்கி பிரிவேக்கத்தோடு எதையாவது செய்ய வேண்டும் என்ற தவிப்போடு பார்த்துக் கொண்டிருக்கும் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தம்மிடம் உள்ள வளங்களை கொண்டு எப்படி ஒரு தேசத்தைக் கட்டி எழுப்பலாம் என்று சிந்திக்க வேண்டும்.

தேசத்தை கட்டி எழுப்புவது அல்லது தேச நிர்மாணம் எனப்படுவது ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாக வனையும் அம்சங்களைப் பலப்படுத்தி நீடித்திருக்க தேவையான கட்டமைப்புகளை உருவாக்குவது தான். இந்த அடிப்படையில் பார்த்தால் அரசியல் கைதிகள்,நில ஆக்கிரமிப்பு, காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்கு நீதி,முன்னாள் இயக்கத்தவர்களுக்கு வாழ்வாதாரம் போன்ற எல்லாவற்றிற்கும் பொருத்தமான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும்.

தாயகத்தில் தேவை உண்டு. புலம் பெயர்ந்த தமிழ்மக்கள் மத்தியில் போதிய அளவு வளமும்,நிபுணத்துவ அறிவும், உதவி செய்ய வேண்டும் என்ற தவிப்பும் உண்டு. இரண்டையும் இணைப்பது தேச நிர்மாணிகளின் வேலை.

தாயகத்தில் நடக்கும் அரசியல் செயற்பாடுகள் முதற்கொண்டு ஆன்மிகச் செயல்பாடுகள் வரை அனைத்திலும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் கை இருக்கிறது. இதற்கு ஆகப் பிந்திய சில உதாரணங்களை இங்கு காட்டலாம்.

யாழ்ப்பாணத்தில் விழிப்புலன் மற்றும் செவிப்புலனை இழந்தவர்களுக்கான ஒரு நிறுவனம் கருவி என்ற பெயரில் இயங்குகின்றது. யாழ்ப்பாண நடுத்தர வர்க்கத்தால் விரும்பி நுகரப்படும் சைன் என்று அழைக்கப்படுகின்ற திரவ சவர்க்காரத்தை அந்த நிறுவனமே தயாரிக்கின்றது. அந்த நிறுவனம் தனக்கென்று ஒரு கட்டடத்தை கட்டுவதற்கு நீர்வேலியில் ஒரு காணியை வாங்கியுள்ளது. அதற்குரிய நிதி உதவிகளை புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புகளே பெருமளவிற்கு வழங்கின.

அவ்வாறுதான் யாழ்ப்பாணத்தில் இயங்கும் மாற்றம் அறக்கட்டளை நிதியத்துக்கும் உதவிகள் கிடைக்கின்றன. போதைப் பொருள் பாவனையால் நோயாளிகளாக மாறியவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்தும் அந்நிலையம் கத்தோலிக்கத் திருச்சபையால் பராமரிக்கப்படுகிறது. அங்கே பொருத்தமான வளங்களோ ஆளனியோ கிடையாது. ஒரு மத குருவும் ஒரு துறைசார் உழவள ஆலோசகரும் அவர்களுக்கு சில உதவியாளர்களும் மட்டுமே உண்டு. அரசாங்கம் அந்த நிறுவனத்துக்கு மருதங்கேணியில் 10 ஏக்கர் நிலத்தை வழங்கியிருக்கிறது. அந்த நிலத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழ் தரப்பு உதவியிருக்கிறது.



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

இவ்வாறு தாயகத்தில் தேவையான கட்டுமானங்களை உருவாக்குவதற்கு புலம் பெயர்ந்த தமிழ்த் தரப்பு உதவ முடியும். அதை ஒரு கொடையாக அல்ல. தேச நிர்மாணத்தின் ஒரு பகுதியாகச் செய்ய வேண்டும். முதலீடு செய்வது அல்லது முதலீட்டை தேச நிர்மானத்தின் ஒரு பகுதியாகச் செய்வது. எல்லாவற்றையும் கட்டமைப்புக்களுக்கூடாகச் சிந்திக்க வேண்டும். அரூபமாகக் கற்பனை செய்து கோஷங்களோடு வாழ முடியாது. யதார்த்தமான கட்டமைப்புகளை உருவாக்கி அவற்றை பலப்படுத்தினால் தான் தூலமாக ஒரு தேசத்தை நிர்மாணிக்கலாம்.

எல்லா வெற்றி பெற்ற சமூகங்களிலும் பிரமிக்கத்தக்க நிறுவன உருவாக்கிகளைக் காணலாம்.லாப நோக்கமற்ற நிறுவன உருவாக்கிகளால் ஒரு சமூகத்தை அதன் அடுத்த கட்ட கூர்ப்புக்கு எடுத்துச் செல்ல முடியும். தமிழ்ச் சமூகத்திலும் ஒரு காலகட்டத்தில் அவ்வாறு நிறுவன உருவாக்கிகள் தோன்றினார்கள். இந்து மற்றும் கிறிஸ்தவ அறக்கட்டளைகள் உருவாக்கிய நிறுவனங்களின் விளைவாகத் தான் நவீன தமிழ்ச் சமூகம் உருத்திரண்டது. எனவே ஆயுதமோதலுக்கு பின்னரான ஒரு கால கட்டத்தில் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தேசத்தை கட்டியெழுப்புவதற்கும் எப்படிப்பட்ட நிறுவனங்கள் கட்டமைப்புகள் தேவை என்று கண்டு அவற்றை உருவாக்க வேண்டும்.

அரசியல் கைதிகளுக்கான கட்டமைப்பு முதற் கொண்டு போதைப்பொருள் நோயாளிகளை பராமரிப்பதற்கான புனர்வாழ்வு அமைப்புகள், தனித்து விடப்பட்ட முதியோரைப் பராமரிப்பதற்கான கட்டமைப்புக்கள் என்று எல்லாவற்றுக்கும் துறைசார் அறிவும் நவீன வளங்களும் தேவைப்படுகின்றன. அவையெல்லாம் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் தாராளமாக உண்டு. எனவே தேவையையும் வளங்களையும் இணைத்து தேசத்தைக் கட்டியெழுப்ப அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் புத்திஜீவிகளும் முன்வர வேண்டும்.

# ரணிலுக்கு டோவால் நிபந்தனை?

**கட்டுரையாளர்:**
**ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து – பார்த்தீபன் –**

இலங்கையிலிருந்து சீனாவை முழுமையாக வெளியேற்றினால் உங்களோடு முழுமையாக இருப்போம் என்று அண்மையில் கொழும்புக்கு வருகை தந்திருந்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தெரிவித்திருந்ததாக கொழும்பில் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக 26 நவம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை வெளியான சிங்கள வார இதழ் ஒன்றும் செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது –

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் திடீர் இலங்கைப் பயணம் தொடர்பாக இந்திய ஊடகங்கள் மௌனம் காத்து வந்தன. பொதுவாக டோவல் வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தில் இருந்தால், இந்திய ஊடகங்கள் அதனை மற்றவர்களுக்கு முன்னதாக வெளியிட்டு வருவது வழமை.

அத்துடன், கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் கால கட்டத்தின் போது டோவல் பல தடவைகள் இலங்கைக்கு வருகை தந்து, கோட்டா மற்றும் ஏனைய உயர்மட்ட அரசியல்வாதிகளை அதிகாரபூர்வமாக சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்திய ஊடகங்கள் ஒவ்வொருவரின் ஒளிப்படங்களுடன் செய்தி வெளியிடும் பணியில் ஈடுபட்டிருந்தன. ஆனால், இம்முறை டோவலின் பயணம் குறித்த செய்திகளோ, ஒளிப்படங்களோ இந்திய ஊடகங்களில் வெளிவராதது ஆச்சரியத்தை தந்தன. டோவலின் இலங்கைப் பயணத்தின் அதீத இரகசியம் காரணமாக இருக்கலாம்.

### உயர்மட்ட சிறப்புச் சந்திப்புக்கள்

இலங்கைக்கு டோவல் பயணம் செய்து உயர்மட்ட அரசியல்வாதிகளை சந்திக்க உள்ளதாக முன்னரே செய்தி கசிந்திருந்தது. அதன்படி, இலங்கையில் டோவல் கழித்த சில மணி நேரங்களில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கைக்கு கடந்த வாரம் வருகை தந்த பசில் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், அந்தச் சந்தர்ப்பங்கள் அனைத்திலும் தனது பயணத்தின் உச்சக் கட்ட இரகசியத்தைக் காக்க டோவல் அக்கறை எடுத்துக் கொண்டது ஒரு சிறப்பு நிகழ்வு.

### வான்வெளி மூடப்பட்டதா?

இலங்கையை விட்டு டோவல் வெளியேறிய சில மணித்தியாலங்களில், உள்நாட்டில் இயங்கும் நியூஸ்வேவ் இணையத்தளம் சிறப்பு செய்தியொன்றை வெளியிட்டது.

இலங்கைக்கு சொந்தமான வான்வெளியின் ஒரு பகுதியை மூட இந்தியா நடவடிக்கை எடுத்ததாக செய்தி வெளியிட்டது. இலங்கைக்கு சொந்தமான வான்வெளியை மூடுவது மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்தப் பட்டதால், குறைந்தபட்சம் ஒரு பாதுகாப்புப் படை வானூர்தியோ அல்லது வர்த்தக வானூர்தி கூட இலங்கைக்கு வருவதோ அல்லது வெளியேறுவதோ இலங்கையின் மூடிய வான்வெளிக்குள் நுழைவது தடை செய்யப்பட்டது.

### வானூர்தி வந்ததா?

இலங்கையின் வான்வெளி திடீரென மூடப்பட்டது என்ற செய்தியால், சீன வானூர்தி இலங்கையின் வான்வெளிக்குள் நுழைந்ததாகவோ அல்லது அடையாளம் தெரியாத எதிரி வானூர்தி இந்தப் வான்வெளிக்குள் நுழைந்ததாகவோ வந்த செய்திகளால் இப்படியொரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கலாம் என்று பலரும் கருதினர்.



ஏனெனில், சீன நீர்மூழ்கிக் கப்பல்களும், 'யுவான் வாங் 5' உயர்ரக தகவல் தொடர்புக் கப்பலும், இந்தியாவுக்குத் தெரியாமல், இந்தியாவின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும், இந்தியப் பெருங்கடல் வழியாக, இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்ததை, இந்தியாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இதன் காரணமாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நல்லுறவு சீர்குலைந்து போனதை காணமுடிந்தது. அதனால் தான் இந்தியா மட்டுமல்ல, அமெரிக்காவும் கடந்த காலங்களில் எமது கடல் எல்லையை எவ்வாறு கண்காணித்து வருகின்றது என்பதை காண முடிகின்றது.

### இந்தியாவில் மாபெரும் போர் பயிற்சி

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் ஸ்ரீ கனகா நகரில் இரகசிய இடத்தில் இந்தியா கடந்த சில நாட்களாக மாபெரும் இராணுவப் பயிற்சி நடத்தி வருவதாக தெரியவருகின்றது.

இந்திய வான் படையும் இராணுவமும் இணைந்து நடத்திய 'சத்ரு நாஷ்' என்ற இந்த இராணுவப் பயிற்சியில், இந்திய வரலாற்றில் முதன்முறையாக கதிரியக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்திய வான்படை தரை இலக்குகளைத் தாக்கும் பயிற்சியை நடத்தியது.

இதற்காக இந்தியாவின் அதி நவீன போர் வானூர்திகளை பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தனர். சமீபத்திய போர் தாக்குதல் உலங்கு வானூர்திகளை பயன்படுத்தி எதிரி இலக்குகள் மீதான தாக்குதல்களும் நடத்தப்பட்டன. எமக்கு அதன் காட்சிகள் கூட வெளியாகின. அவற்றினை பார்வையிடும் போது, கற்பனை செய்ய முடியாத போர் தொழில்நுட்பத்தை இந்தியா எவ்வாறு பெற்றுள்ளது என்பதை நாம் தெளிவாகக் கவனிக்க முடியும்.

### இந்தியாவில் தரையிறங்கும் அமெரிக்கா!

அமெரிக்க சிறப்பு பாதுகாப்பு குழுவும் இந்தியா வருகை தரவுள்ளதாக எங்களுக்கு தகவல் கிடைத்தது. இதுவரை நடக்காத மாபெரும் போர் பயிற்சியை இந்தியாவும் அமெரிக்காவும் நடத்தி வருகின்றது.

இந்திய–சீனா எல்லைக்கு அருகில் உள்ள இமயமலையின் உத்தரகாண்ட் பகுதியில் இந்த நடவடிக்கையை நடத்ததிட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

அதன்படி எதிர்காலத்தில் இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை ஒடுக்க இந்தியாவும் அமெரிக்காவும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக உள்ளன என்பதை இந்த நிகழ்வுகளில் இருந்து அறியலாம்.

இந்தப் பின்னணியில், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், இந்த இராணுவ நடவடிக்கை குறித்து இலங்கைக்கு தெரிவிக்க மிகவும் இரகசியமாக இலங்கைக்கு வருகை தந்தாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக அதிகாரப்பூர்வமற்ற வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

### இராஜதந்திர நெருக்கடி!

எமது ஊடகத்தில் பல சந்தர்ப்பங்களில் செய்தி வெளியிட்டிருந்த நிலையில், சீனாவின் 'யுவான் வாங் – 5' கப்பலை இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் நுழைய அனுமதிப்பதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கை பாரிய இராஜதந்திர மோதலில் ஈடுபட நேரிடும் என்பதை சுட்டிக்காட்டியிருந்தோம்.

இந்தியா மற்றும் அமெரிக்காவின் எதிர்ப்பு, இலங்கை தொடர்பில் இந்தியாவும் அமெரிக்காவும் கொண்டுள்ள எதிர்வினைகளைப் பார்க்கும் போது நாம் அன்று சொன்ன விடயங்கள் இன்று யதார்த்தமாகி விட்டதாகவே தோன்றுகின்றது.

### காத்திருக்கும் ரணில்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று 4 மாதங்களுக்கு மேலாகியும், ரணிலை சந்திக்க பிரதமர் நரேந்திர மோடி இதுவரை சந்தர்ப்பம் வழங்கவில்லை.

இலங்கைக்கான இந்திய தூதுவர், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட மற்றும் ஜனாதிபதியின் தனிப்பட்ட செயலாளர் சாகல ரத்நாயக்கவை திடீரென இந்தியாவிற்கு அனுப்பி சந்திப்பதற்கான நேரம் பெற ரணில் முயற்சித்த போதிலும் அவரால் இதுவரை வெற்றிபெற முடியவில்லை.

இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி இலங்கைக்கு சீனக் கப்பல் வருகை தர ரணில் அனுமதி வழங்கியதே இந்த வாய்ப்பு கிடைக்காததற்குக் காரணம் எனப் பலரும் சந்தேகம் வெளியிட்டு வருகின்றனர்.

# பிரம்டனில் வான வேடிக்கைகளுக்கு எதிராக திரண்ட 9000 மக்கள்!

ஒன்ராறியோவின் பிராம்டன் நகரில் வானவேடிக்கைகளுக்கு எதிராக 9,000 மக்கள் ஆதரவு தெரிவித்து மனு அளித்துள்ளனர். எதிர்வரும் கவுன்சில் கூட்டத்தில் மக்களின் முடிவுக்கு மதிப்பளிக்கும் வகையில், வாண வேடிக்கைகளுக்கு தடை விதிக்கவும் விற்பனைக்கு எதிராகவும் முடிவெடுக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

பிராம்டன் நகரவாசி ஒருவர் முன்னெடுத்த இந்த நடவடிக்கையானது தற்போது 9,000 மக்களின் ஆதரவை பெற்றுள்ளது. பிராம்டனில் வாணவேடிக்கைகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டும் என்றே நகர மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

நள்ளிரவு கடந்தும் வாண வேடிக்கை முன்னெடுப்பதும், அதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதும் மக்களை அவதியில் தள்ள, இறுதியில் புகார் மனு திரட்ட முடிவு செய்துள்ளனர். மொத்தம் 10,000 புகார் மனுக்களை திரட்டவே பிராம்டன்வாசிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே பிரம்டன் கவுன்சில் வாண வேடிக்கைகளுக்கு தடைவிதிக்கும் முடிவை அறிவித்துள்ளது. வாணவேடிக்கை நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதும் விற்பனை செய்வதும் இனி சட்டவிரோதமாகும்.

தற்போது, ஆண்டுக்கு நான்குமுறை மட்டுமே வாண வேடிக்கை நிகழ்ச்சிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மக்கள் தனிப்பட்ட முறையில் தீபாவலி, விக்டோரியா தினம், கனடா தினம் மற்றும் புத்தாண்டு பிறப்பு ஆகிய தினங்களில் வாணவேடிக்கை நிகழ்ச்சிகளை முன்னெடுக்கலாம்.




ஆனால் இதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட உயரத்திற்கு மேல் காணப்பட்டால் அது சட்டவிரோதம் எனவும் கூறியுள்ளனர். விதிகளை மீறுவோருக்கு 350 முதல் 500 டொலர் அபராதம் விதிக்கப்படும் எனவும் வாணவேடிக்கை விற்பனைக்கு 350 முதல் 1,000 டொலர்கள் அபராதம் விதிக்கப்படும். மட்டுமின்றி, இரவு 11.00 மணி வரையில் மட்டுமே வாண வேடிக்கைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்கட்சிகள் இணைவு:- ஓர் கனவு

சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் இணைந்தால்…! தமிழ் அரசியல் மாற்றத்துக்குள்ளாகுமா? அப்படியான அதிசயமொன்று நிகழுமா? என்ற விருப்பக் கேள்விகளுக்கான பதிலை அண்மைக் காலச் சம்பவங்கள் மிகத் துலக்கமாகக் காட்டுகின்றன. இதை விளங்கிக் கொண்டால் மேற்படி கேள்விகளுக்கான பதில் எளிதாகக் கிடைக்கும்.

ஆனால் அரசியலில் எதுவும் எப்போதும் நடக்கலாம். எதிரிகள் நண்பர்களாவதும் நண்பர்கள் எதிரிகளாவதும் சாதாரணம். அந்த வகையில் இணைவும் பிரிவும் எப்போதும் எப்படியும் நிகழலாம் என நீங்கள் எண்ணக் கூடும்.

இருந்தாலும் சிங்கள, முஸ்லிம் தரப்புகளைப் போல நெகிழ்ச்சியைக் கொண்டதல்ல, தமிழ் அரசியல். அது துரோகம் தியாகம் என்ற அடிப்படையில் கறுப்பு வெள்ளையாகக் கட்டமைக்கப்பட்டது. அதாவது இறுக்கமான கட்டமைப்பு. இதனால் இந்தக் கரடுமுரடுத் தன்மையைக் கடந்து எதுவும் நடப்பதென்பது எளிதானதல்ல. இதுவே பிரச்சினை.

இதற்கு மேலும் ஒரு நல்ல உதாரணம், தற்போது நடந்து கொண்டிருக்கும் திருக்கூத்தாகும்.

அடுத்த ஆண்டுக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தாம் தயார் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்ததை அடுத்து, அதற்கான தயாரிப்புகளுக்காக தமிழ்க்கட்சிகள் அனைத்தையும் சம்மந்தனின் வீட்டில் கூடுமாறு சுமந்திரன் அழைப்பு விடுத்தார்.

சுமந்திரனின் அழைப்புக்கு மாவை சேனாதிராஜா மட்டுமே செவி கொடுத்து சம்மந்தனின் வீட்டுக்குச் சென்றார். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிலிருந்து எவரும் போகவில்லை. இவ்வளவுக்கும் அன்று காலை கொழும்பில் ஐ.நா பிரதிநிதிகளுடன் நடந்த சந்திப்பில் ரெலோ செல்வம் அடைக்கலநாதனும் புளொட் சித்தார்த்தனும் கலந்து கொண்டனர்.

ஆனால் கொழும்பிலுள்ள சம்மந்தன் வீட்டில் நடந்த மாலைக் கூட்டத்துக்குப் போகாமல் இருவரும் தவிர்த்துள்ளனர். பங்காளிக் கட்சிகள் மட்டுமல்ல, அதற்கு வெளியே உள்ள ஆனந்தசங்கரி, கஜேந்திரகுமார் அணி, சுரேஸ் பிரேமச்சந்திரன், முருகேசு சந்திரகுமார், சுகு ஸ்ரீதரன், சி.கா. செந்தில்வேல், கிழக்குத் தமிழர் ஐக்கிய முன்னணி, விக்னேஸ்வரன், ஐங்கரநேசன், அனந்தி சசிதரன், சிவாஜிலிங்கம் — ஸ்ரீகாந்தா போன்றோரும் இந்த அறிவிப்பைப் பொருட்படுத்தவேயில்லை.

இதனால் வேறு வழியின்றி வேறொரு இடத்தில் வேறொரு திகதியில் கூட்டத்தை நடத்துவதற்கு யோசிக்கப்படுவதாக சம்மந்தன் அறிவித்திருக்கிறார். தற்போதுள்ள அரசியல் தலைவர்களில் வயதில் மூத்தவர் சம்மந்தனே. பாராளுமன்றத்திலும் தமிழ்த்தரப்பில் செல்வாக்குள்ள தரப்பின் தலைவராகவும் சம்மந்தனே உள்ளார். பேச்சுகளிலும் அவருக்கு முக்கிய இடமளிக்கப்படும்.

இப்படியெல்லாம் இருந்தும் சம்மந்தனுடைய அழைப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளது. மட்டுமல்ல, சம்மந்தனின் சார்பாக அழைப்பை விடுத்தவர் சுமந்திரன். சுமந்திரன் கூட்டமைப்பின் பேச்சாளர். தமிழசுக் கட்சியில் இரண்டாம் நிலைத் தலைவர். இருந்தும் அவருடைய அழைப்பு செவி கூரப்படவில்லை. என்றால் இவர்களுடைய அரசியல் மதிப்பு பெறுமானம் எப்படியிருக்கிறது? என்ற கேள்வி எழுகிறது.

இது சிங்களத்தரப்பிலும் அரசாங்க மட்டத்திலும் பலவீனமாகவே உணரப்படும். மட்டுமல்ல, சர்வதேசப் பரப்பிலும் பிராந்திய சக்தியாகிய இந்தியாவிடத்திலும் இது கூட்டமைப்பின் வீழ்ச்சியையே காட்டும். ஆக மொத்தத்தில் மிகப் பெரிய சரிவை நோக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமிழரசுக் கட்சியும் போய்க் கொண்டிருக்கிறது என்பதை இதுவும் நிரூபிக்கிறது.

இந்த நிலையில் எப்படி சுமந்திரனும் கஜேந்திரகுமார் அணியும் இணைய முடியும்? அப்படி இணைந்தாலும் அந்த இணைவு எவ்வளவு காலத்துக்குத் தாக்குப் பிடிக்கும்? ஏனைய தரப்புகள் தான் கூட்டமைப்பின் அரசியலோடு ஓரளவுக்கு ஒத்துப் போகக் கூடியவை. சமஸ்டியையோ 13 ஆவது திருத்தத்தையே ஏற்றுக் கொள்ளும் நிலையில் உள்ளவை. ஆனால் கஜேந்திரன்களின் அரசியல் அவ்வாறானதல்ல.



அவர்களுடைய இயல்பும் வேறானது. இப்பொழுதே கஜேந்திரகுமார் ரணிலின் அரசியல் தீர்வு அறிவிப்பைப் பற்றி எதிர்மறையாகப் பேசத் தொடங்கி விட்டார். இந்த நிலையில் சுமந்திரன் கஜேந்திரகுமார் இணைவு சாத்தியக் குறைவானதே.

ஆனால், இருவரிடத்திலும் சில திறமைகள் உண்டென்பது உண்மை. ஆனால், அது ஒடுக்குறைக்குள்ளாகியிருக்கும் மக்களின் அரசியல் விடுதலைக்கு உதவக்கூடியதல்ல. அதற்கு மக்கள் அரசியலைச் செய்ய வேண்டும். மக்கள் அரசியலைச் செய்ய வேண்டும் என்றால் மக்களுடன் வாழத் தயாராக வேண்டும். அது என்ன என்று தெரியவேண்டும். அதற்கான உளநிலை வேண்டும். மக்களுடைய பிரச்சினைகளை தங்களின் பிரச்சினையாக உணரக் கடிய பண்பு வேண்டும். அல்லது நடைமுறை அனுபவத்தில் மக்கள் சந்தித்த பாதிப்புகளையும் நெருக்கடிகளையும் சந்தித்திருக்க வேண்டும்.

இப்பொழுது சுமந்திரனால் விடப்பட்ட அழைப்பைப் பார்த்தீர்களா? அதை அவர் விடுத்திருக்க வேண்டிய முறையே வேறு. ஏனென்றால்,அவர் கூட்டமைப்பின் பேச்சாளர். விடப்பட்ட அறிவிப்பு இந்தக் காலகட்டத்தில் முக்கியமானது. அல்லது அவருடைய நோக்கம் இந்தச் சந்தர்ப்பத்தில் பேச்சுக்குச் செல்வதற்கு முன்பு ஒழுங்கமைக்க வேண்டும் என்ற வகையில் முக்கியமானது. அதுவும் சம்மந்தனால் விடச் சொன்ன அழைப்பு.

அதை வெறுமனே ஊடகச் செய்தியாக விடுக்க முடியாது. இதையே இந்த அழைப்புத் தொடர்பாக ஏனைய தலைவர்களும் சொல்கிறார்கள். தங்களுக்கு உத்தியோகபூர்வமாக எத்தகைய அறிவிப்பும் கிடைக்கவில்லை என்று.

உத்தியோகபூர்வ அழைப்பு என்றால், அதில் எந்த அடிப்படையில் ஒன்று கூடல் நடக்கிறது? யார் தலைமையில் சந்திப்பு நடக்கும்? அதில் பேசப்படும் விடயங்கள் என்ன? இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி நிரலையும் இணைத்தே அறிவிப்பை அழைப்பை விடுக்க வேண்டும். அதுவும் முரண்நிலைக்குள்ளாகியிருக்கும் தமிழ் அரசியற் தரப்புகளை விசுவாசமாகவே அழைப்பதாக இருந்தால், சுமந்திரன் நேரடியாகக் களத்தில் இறங்கி ஒவ்வொரு தரப்பையும் சந்தித்திருக்க வேண்டும். அப்படிச் சந்தித்திருந்தால் அதன் பயன் பெறுமதி கூடியிருக்கும். சில வேளை அப்படி நேரில் சென்று அழைத்த பின்னும் சிலர் கலந்து கொள்ளத் தயங்கி நின்றாலும் சுமந்திரனின் மதிப்பும் கூட்டமைப்பின் மதிப்பும் கூடியிருக்கும். ஆகக் குறைந்தது சுமந்திரன் சம்மந்தப்பட்டோருடன் பேசியிலாவது நேரம் ஒதுக்கிப் பேசியிருக்க வேண்டும். கூட அவர் செய்யவில்லை.

இதை அவரிடம் நாம் எதிர்பார்க்க முடியாது. அவரிடம் மட்டுமல்ல, அவருடைய அரசியற் குருவான சம்மந்தனிடமும் எதிர்பார்க்கவியலாது. இது தான் இவர்களுடைய பிரச்சினையே. மக்களைப் பற்றியோ அரசியல் தீர்வைக் குறித்தோ இவர்களுடைய இதயத்தில் ஆத்மார்த்தமான ஈடுபாடு இல்லை. சம்மந்தனை விட அரசியலிலும் வயதிலும் குறைந்த ஸ்டாலின் இன்று தமிழகத்தில் செயற்படுகின்ற விதத்தை சம்மந்தன் கவனிக்க வேண்டும். எதிரும் புதிருமான தரப்புகளையெல்லாம் முடிந்தளவுக்குத் தன்னுடைய கைகளில் கொண்டு வந்திருக்கிறார் ஸ்டாலின். அப்படிச் செய்தபடியால் தான் அவரால் பா.ஜ.கவின் நெருக்கடியைச் சமாளித்து நிற்க முடிகிறது. தமிழக அரசியலைப் பலரும் வியக்கும்படி செய்யவும் முடிந்திருக்கிறது.

இதற்குக் காரணம் ஸ்டாலின் தன்னுடைய இதயத்தைச் சற்று அகலமாக்கி வைத்தது தான். என்றபடியால் தான் திருமாவளவனும் இடதுசாரிகளும் வை.கோவும் முஸ்லிம் லீக்கும் ஒன்றிணைந்து நிற்க முடிந்தது.

ஆகவே பிற சக்திகளை ஒரு புள்ளியில் ஒன்றிணைய வைப்பதென்பது ஒரு கலை. ஏனென்றால் வெவ்வேறு அரசியற் கட்சி என்றாலே கொள்கை, நடைமுறை, அணுகுமுறை, ஆளுமை, தனிநபர் இயல்பு எனப் பல வேறுபாடுகளும் தனித்தன்மைகளும் இருக்கும். இதையெல்லாம் விளங்கிக் கொண்டே அழைப்பு விடுக்கப்பட வேண்டும். அழைப்பை பகிரங்க வெளியில் விடுவதையும் விட நேர்ப்பேச்சாக முன்னெடுப்பதே எப்போதும் கூடுதலான பயனைத் தருவதுண்டு.

பெரும்பாலான அரசியற் கூட்டுகள் அப்படித்தான் அமைவது அமைக்கப்படுவது. இதைத் தான் அழைக்கும் விதத்திலேயே அதனுடைய பெறுமதியை தெரியும் என்று சொல்வது. உண்மையில் இந்த அழைப்பே ஒரு வேலைத் திட்டமாகும். ஆகவே ஒன்றிணைவுக்கான அடிப்படை வேலையைச் செம்மையாகச் செய்ய வேண்டும். அதற்கான பொறுப்பை உரியவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். அத்தகைய பண்பு இன்றுள்ள தமிழ் அரசியற் தரப்புகள் பலவற்றிடமும் இல்லை. ஏட்டிக்குப் போட்டியாக யாரிக்கு நிற்கும் சிறுபிள்ளைத்தனத்தையே காணமுடிகிறது.

தலைவர்களில் பெரும்பாலானோர் மிகுந்த உளச் சிக்கலுக்குள்ளானோராகவே உள்ளனர். தங்கள் நிலை என்ன? தகுதி என்ன? தாம் என்ன செய்கிறோம்? என்ன செய்ய வேண்டும்? என்பதில் தெளிவோ சீரிய சிந்தனையோ இல்லாதவர்களாகவே உள்ளனர். குறைந்த பட்சம் சமகால நிலைமையையும் மிகக் கிட்டிய கடந்த கால அனுபவத்தையும் கூடப் பரிசீலித்துப் பார்க்க முடியாதோராக இருக்கிறார்கள்.

இவ்வளவுக்கும் தமிழ் மக்களோ சிறுபான்மையினர். அதிலும் ஒடுக்குப்படும் நிலையில் இருப்போர். போராட்டத்திலும் போரிலும் தோற்கடிக்கப்பட்டோர். இழப்புகளையும் பாதிப்புகளையும் தங்கள்


**கட்டுரையாளர்:**
**கிளிநொச்சியில் இருந்து**
**– கருணாகரன் –**




தலைக்கு மேலா சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருப்போர். இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அந்த மக்களுக்கான விடுதலைப் பெறுவதைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய தலைவர்கள், நான் பெரிதா? நீ பெரிதா என்று கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறார்கள்.

இன்னொரு சாரார், தமது அரசியல் செல்வாக்கென்ன? பலமென்ன? என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளனர். பெரும்பாலானோர்கள் கற்பனைக் குதிரையில் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். யதார்த்தம் என்ன என்பதைக் கூட மதிப்பிட முடியாதோராக. இதில் சிலர் கடந்த காலத்தில் பெறுமதியான பங்களிப்புகளைச் செய்தவர்கள். இருந்தாலும் இவர்கள் கூட இப்போதுள்ள தங்களின் நிலையையும் தங்கள் கட்சியின் செல்வாக்கையும் பற்றிப் புரிந்து கொள்ள முடியாதாராகவே இருக்கிறார்கள். மக்களுக்கும் தமக்கும் இடையில் உள்ள உறவையும் இழந்து விட்டனர்..

இருந்தாலும் தம் மைப் பற்றிய பெரீய்ய நினைப்புகளோடு தானிருக்கிறார்கள். இது எவ்வளவு பிழை. எவ்வளவு பலவீனம்! இப்படியான நிலையில் தான் இணைவு, ஒற்றுமை பற்றியெல்லாம் பேசப்படு கிறது. இதில் பல வகையான இணைவுகள் அல்லது ஒன்றுபடுதல்கள் பற்றிச் சிந்திக்கப்படுகிறது.

1.சுமந்திரன் —கஜேந்திரகுமார் இணைவு (பெரும்பாலும் இது கற்பனையானதே) ஒரு உறைக்குள் இரண்டு வாள்கள் இருக்க முடியாதல்லவா!

2.கூட்டமைப்போடு (தமிழரசு, புளொட், ரெலோ) சுரேஸ், விக்னேஸ்வரன், சிவாஜிலிங்கம் ஸ்ரீகாந்தா போன்றோரின் ஒன்றிணைவு. அதாவது பிரிந்தவர்கள் மீண்டும் இணைந்து கொள்வது.

3.தமிழ்த்தேசிய அடையாளத்துக்கு அப்பால் உள்ள தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி,சமத்துவக்கட்சி, ஈபிஆர்எல்எவ், தமிழ்த்தேசிய பசுமை இயக்கம், ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம், புளொட், ரெலோ, கிழக்குத் தமிழர் ஐக்கிய முன்னணி, புதிய லெனினிஸ மாக்ஸிஸக் கட்சி போன்றவற்றின் இணைவு.

4.அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் ஈ.பி.டி.பி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் மற்றும் வடக்குக்கிழக்கில் உள்ள சிறு தரப்புகள்.

எதுவானாலும் இணைவு ஒன்றுபடுதல் என்பது தமிழரசியலில் மிகக் கடினமான ஒன்றாகவே உள்ளது.

குலுக்கப்படும் கை ஒன்றென்றால் மறு கையில் கத்தி இருக்கும் என்ற நிலை. இது தான் வரலாறாகவும் உள்ளது.

# சரி வருமா பொறி முறை?

இந்தியப் பெருங்கடலில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் அமைந்துள்ள இலங்கை, வெளிநாட்டுப் போர்க் கலன்களின் வருகைகளை முற்றாக தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது.

ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம் என்ற நிலையில் இப்போது இலங்கை இருக்கிறது. இந்தியாவும், சீனாவும் தான் இலங்கைக்கு முக்கியமான நெருக்கடியைக் கொடுக்கும் தரப்புகள். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்தில் இருந்தே இலங்கை அணிசேரா கொள்கையில் ஈடுபாடு காட்டி வந்தது. ஆனாலும் அவ்வப் போது சில விவகாரங்களில் இலங்கை அரசாங்கம் எடுத்த முடிவுகள், சர்வதேச அளவில் சிக்கல்களை ஏற்படுத்தியது. 1971இல் இந்திய- பாகிஸ்தான் போர் நடந்து கொண்டிருந்த போது, கிழக்கு பாகிஸ்தானுக்கு (பங்களாதேஷ்) செல்லும் பாகிஸ்தான் விமானப் படை விமானங்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் வசதியை வழங்கியிருந்தது இலங்கை.



இலங்கை மீது இந்தியாவுக்கு பெரியளவில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திய முதல் நிகழ்வு அது. கிழக்கு பாகிஸ்தானை சுதந்திர நாடாக விடுவிப்பதற்கு, இந்தியா போரிட்டுக் கொண்டிருந்த போது பாகிஸ்தான் படைகளுக்கு இலங்கையைப் பயன்படுத்த இடமளித்தமை பாரதூரமான விடயமாக காணப்பட்டது.

ஆனாலும் இந்தியா அயல் நாடு என்ற வகையில் இலங்கையை அரவணைத்துச் செல்லும் நிலைப்பாட்டை எடுத்தது. வடக்கே சீனா, மேற்கே பாகிஸ்தான், என எதிரி நாடுகளைக் கொண்டிருக்கும் நிலையில், தெற்கிலேயும் இலங்கையுடன் பகைமையை வளர்ப்பதை இந்தியா புத்திசாலித்தனமாக கருதவில்லை.

இன்று வரைக்கும் இந்தியா அதே நிலைப்பாட்டில் தான் இருந்து கொண்டிருக்கிறது. அது தான் பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்கம் அழுத்தங்கள், நெருக்கடிகள், ஆபத்துகளில் இருந்து தப்பித்துக் கொள்ளவும் காரணம்.

இலங்கையுடன் நெருங்கிய உறவைப் பேணுவதன் மூலம், தனது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வது இந்தியாவின் திட்டம். விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டி, இலங்கை தனது படைபலத்தைப் பெருக்கிக் கொண்டதை இந்தியா விரும்பவில்லை. இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம், அவர்களை வளைக்க முடியாது என்பன போன்ற காரணங்களால் மாத்திரம், விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இந்தியா துணை போகவில்லை. அவர்களைச் சாட்டாக வைத்துக் கொண்டு, தனக்குத் தெற்கே படைவலிமை பெற்ற நாடு உருவாவதைத் தடுக்கவும் இந்தியா திட்டமிட்டது.

ஏனென்றால், இலங்கையை முற்றுமுழுதாக நம்பக் கூடிய நிலையில் இந்தியா இல்லை. எந்த நேரத்திலும் அது காலை வாரி விடும் என்ற பயம் இந்தியாவுக்கு இன்றைக்கும் இருக்கிறது. போர்க் காலத்திலும் அதற்குப் பின்னரும் இலங்கைப் படைகளுக்கு அதிகளவில் பயிற்சிகளை அளிக்கின்ற நாடு இந்தியா தான்.

ஆண்டுக்கு 1400 வரையான இலங்கைப் படையினர் இந்தியாவில் பயிற்சிகளைப் பெறுகின்றனர். இவர்களுக்கு இந்த வசதிகளை கொடுக்காது போனால் அவர்கள் பாகிஸ்தானிடம் அல்லது சீனாவிடம் பெற்றுக் கொள்வார்கள். அது, இந்தியாவுக்கு மறைமுகமானதொரு அச்சுறுத்தல் தான்.

அதைவிட, இலங்கை விமானப்படையில் இருந்த பெரும்பாலான போர் விமானங்கள், கட்டையில் ஏற்றப்பட்ட போது பாகிஸ்தானிடம் இருந்து, ஜே.எவ் -17 போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தீர்மானித்தது.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளும் போது அந்த போர் விமான கொள்வனவு உடன்பாடு கையெழுத்திடுவதற்கு தயார் என்ற நிலையில் இந்தியா தலையீடு செய்து அதனைத் தடுத்து நிறுத்தியது.

இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், போர் இல்லாத போது எதிரி நாடுகளைக் கொண்டிராத போது இலங்கைக்கு எதற்கு இத்தகைய சக்தி வாய்ந்த போர் விமானங்கள், அச்சுறுத்தல் ஏற்பட்டால் அழையுங்கள் இந்தியா விரைந்து உதவும் என்று கூறியதாக அப்போது தகவல்கள் வெளியாகின.

அதற்குப் பின்னர் தேவையென்றால் இந்தியா தயாரிக்கும் தேஜஸ் போர் விமானங்களைக் கொள்வனவு செய்யலாம் என்றும், இந்தியத் தரப்பில் ஆலோசனை கூறப்பட்டது.

ஆனால் அதற்கு இலங்கை அரசு ஆளை விட்டால் போதும் என்று ஒதுங்கிக் கொண்டது. இது நடந்து கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளாகியும், இன்னமும், இலங்கை விமானப் படைக்குப் புதிய போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கை இடம் பெறவில்லை.

இந்தியாவை மீறி அவற்றைக் கொள்வனவு செய்ய முடியாத நிலையில் இலங்கை இருக்கிறது. திருகோணமலையில், சீன விமான நிறுவனம், விமானங்களைப் பழுது பார்க்கும் மையத்தை அமைக்க முயன்ற போதும் இந்தியா அதனைத் தடுத்து நிறுத்தியது. கொழும்பில் சீன நீர்மூழ்கிகள் தரித்துச் சென்ற பின்னரும், கடந்த ஆகஸ்ட் மாதம், இந்தியாவின் எதிர்ப்பை புறக்கணித்து, சீனாவின் 'யுவான் வாங்-5' ஆய்வுக் கப்பல் அம்பாந்தோட்டையில் தரித்துச் சென்ற பின்னரும், மீண்டும் இவை இலங்கைத்துறைமுகங்களில் அனுமதிக்க கூடாது என இந்தியா அழுத்தமாக அறிவித்திருக்கிறது.

தனது பாதுகாப்பு நலன்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய கலன்களை இலங்கை அனுமதிக்க கூடாது என்ற நிலைப்பாட்டை இந்தியா எடுத்திருப்பது இலங்கைக்கு நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது.

சீனாவுடன் இலங்கை நெருங்கிய உறவைப் பேணுகிறது. இவ்வாறான நிலையில் இந்தியாவைக் காரணம் காட்டி, சீனக் கப்பல்களை இலங்கைத் துறைமுகங்களுக்கு வரக் கூடாது எனத் தடுப்பதை சீனா விரும்பவில்லை.

சீனாவுக்கும் இலங்கைக்கும் நெருங்கிய நட்புறவு இருக்கிறது. அது மாத்திரமன்றி, பெரியளவில் கடன்கள், பொருளாதார உதவிகளையும் வழங்கியிருக்கிறது அந்த நாடு.

இவ்வாறான நிலையில், சீனாவையும் பகைத்துக் கொள்ள முடியாது. இந்தியாவையும் எதிர்க்க முடியாது என்ற நிலையில் இலங்கை அரசாங்கம் திரிசங்கு நிலையில் இருக்கிறது.

'யுவான் வாங்-5' என்ற சீன ஆய்வுக் கப்பல் அம்பாந்தோட்டையில் தரித்துச் சென்ற போது அது உளவுக்கப்பல் என்று இந்தியா கூறியது. ஆனால் அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வில்லை என்று இலங்கை அரசாங்கம் கூறியது.

இதனால் ஏற்பட்ட இராஜதந்திரக் குழப்பங்கள் இன்று வரை தீராமல் உள்ளன. உதாரணத்துக்கு, கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க இன்று வரை புதுடில்லியில் கால் வைக்க முடியாத நிலையில் இருக்கிறார்.

பகிரங்கமான மோதல்கள் இல்லாவிட்டாலும், உள்ளுக்குள் புகைச்சல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த புகைச்சலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இராஜதந்திர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும், இந்தியத் தரப்பு அழுத்தமான போக்கில் இருப்பதாகத் தெரிகிறது.

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



இந்தநிலையில் தான் அவசர அவசரமாக அரசாங்கம், வெளிநாட்டுப் போர்க் கப்பல்கள், விமானங்கள், இலங்கைத் துறைமுகங்கள், விமான நிலையங்களை அணுகுவதற்கான நிலையான செயற்பாட்டு நடைமுறை ஒன்றை உருவாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில், அவரது தேசிய பாதுகாப்பு ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் மேற்பார்வையில், சட்டமா அதிபர் திணைக்களமும், முப்படை உயர் அதிகாரிகளும் இணைந்து இந்த செயற்பாட்டு நடைமுறையை உருவாக்கியிருப்பதாகவும் விரைவில் அரசாங்கம் இதனை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அது என்ன செயல்முறை என்பதை அரசாங்கம் இன்னமும் வெளிப்படுத்தவில்லை. இந்தியப் பெருங்கடலில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் அமைந்துள்ள இலங்கை, வெளிநாட்டுப் போர்க் கலன்களின் வருகைகளை முற்றாக தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது.

அதேவேளை அணிசேராக் கொள்கையையும் விட்டுக் கொடுக்க முடியாது. அதேநேரத்தில் இந்தியாவினதோ சீனாவினதோ பகைமையையும் சம்பாதிக்க முடியாது.

இவற்றுக்கெல்லாம் தீர்வு வழங்கும் வகையில் ஒரு பொறிமுறையை உருவாக்கிக் கொள்வதில் அரசாங்கம் வெற்றி பெற்றால் அது நிச்சயம் ஒரு முக்கியமான அடைவாகத் தான் இருக்கும்.

அந்தப் பொறிமுறையை இந்தியாவோ, சீனாவோ, ஏற்றுக் கொள்ளாது போனால் மீண்டும் சர்ச்சைகள் உருவாவது தவிர்க்க முடியாது.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா:-
23 ஏப்ரல் 2023
"சங்கீத சங்கமம் 2023"

# நாங்கள் ஏன் தோற்றுக் கொண்டேயிருக்கின்றோம்?

சிங்களவர்களை விடவும் தமிழர்கள் தான் புத்திசாலிகள். இப்படியொரு பார்வை நம்மவர்கள் மத்தியிலிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாண மத்திய தர வர்க்கத்தினர் மத்தியில் அவ்வாறானதொரு பார்வையிருந்தது. மோட்டுச் சிங்களவர்கள் என்று சிலர் சாதாரணமாக கூறிச் செல்வதை, எனது சிறிய வயதில், பல்வேறு சந்தர்பங்களில் கேட்டிருக்கின்றேன். இது சரியானதொரு பார்வை தானா என்னும் கேள்வி இருந்து கொண்டேயிருந்தது. 2002இல், யாழ்வீரசிங்கம் மண்டபத்தில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கலை பண்பாட்டு கழகத்தின் ஏற்பாட்டில், மானுடத்தின் தமிழ் கூடல் இடம் பெற்றது. முதல் நாள் நிகழ்வில் மு. திருநாவுக்கரசு (திருமாஸ்டர்) பேசுகின்றார்.



நம்மில் சிலர் நினைத்துக் கொண்டிருப்பது போன்று சிங்களவர்கள் மோடர்கள் அல்லர். அவர்களின் ராஜதந்திர ஆற்றல் அபரிமிதமானது. மேற்குலகில் மாக்கியவல்லியையும் பிஸ்மார்க்கையும் படித்த ஜே.ஆர்ஜெயவர்த்தன, கீழைத்தேயத்தின் கௌடில்யரையும் படித்தார். கௌடியல்யர் கூறுகின்றார்: உனக்கு இரண்டு எதிரிகள் இருந்தால், ஒரு எதிரியை நண்பனாக்கி, இன்னொரு எதிரியுடன் மோத விடு. இறுதியில் உனது இரண்டு எதிரிகளும் இல்லாமல் போவார்கள். இதுதான் இந்திய-இலங்கை ஒப்பந்தமாகும்.

ஒரு எதிரியான இந்தியாவை நண்பணாக்கி, இன்னொரு எதிரியான விடுதலைப் புலிகளுடன் மோதச் செய்தனர். சிங்களவர்களின் அபாரா ராஜதந்திர ஆற்றல் தொடர்பில் பார்வையாளார்களை, திரு திக்குமுக்காடச் செய்தார். அதே போன்று, வரலாற்றியலாளர் பேராசிரியர். இந்திரபாலா கூறிய ஒரு கருத்தையும் திருநாவுக்கரசு, நினைவுபடுத்தியிருந்தார்.

அதாவது, ஒரு குட்டித்தீவு, பிரமாண்டமான இந்தியாவிற்கு அருகில், இரண்டாயிரம் வருடங்கள் தனித்துவமாக தப்பிப் பிழைக்க முடிந்திருக்கின்றதென்றால், அது மூளையினால் தான் சாத்தியப்பட்டது. சிங்களவர்களின் அறிவாற்றல் தொடர்பில் விடுதலைப் புலிகளின் மேடையிலேயே திருநாவுக்கரசு புகழ்ந்து கொண்டிருந்தார். எனக்குள் எழுந்த கேள்வி, சரி, அவர்கள் மிகவும் திறமைசாலிகள் ஆனால் ஏன் இவற்றை தமிழர்களால் புரிந்து கொண்டு எதிர்வினையாற்ற முடியாமல் போனது? நாங்கள் புத்திசாலிகளல்லவா!

சீன போரியல் நிபுனர் சன் சூ , இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கூறியது. நீ ஒவ்வொரு போரில் தோற்கின்ற போதும், எதிரி உன்னை விட பலமானவனாக இருந்தனால் தான் நீ தோற்றுப் போனாய் என்று கூறாதே, நீ பலவீனமாக இருந்ததால் தோற்றுப் போனாய் என்று கூறு. ஆனால் நமது சூழலில் ஒரு பார்வைக் குறைபாடுண்டு. நாம் தோல்வியடையும் ஒவ்வொரு சந்தர்பங்களிலும் மற்றவர்கள் மீதே விரல் நீட்டுகின்றோம். இந்தியாவின் மீது விரல் நீட்டுகின்றோம். அமெரிக்காவின் மீது விரல் நீட்டுகின்றோம். இல்லாவிட்டால், ஒட்டுமொத்த உலகத்தின் மீதும் விரல் நீட்டுகின்றோம். இது எவ்வாறென்றால், பரிட்சையில் சித்தியடைந்தால், அது மாணவனின் கெட்டித்தனம், பரிட்சையில் தோல்விடைந்தால், அது ஆசிரியரின் பிரச்சினை. இந்த சிந்தனைப் போக்கே எங்களுடைய பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணமாக இருக்கின்றது.

2009இற்கு முன்னர் நம் அனைவரது விருப்பமும் விடுதலைப் புலிகள் வெற்றியடை வேண்டும் என்பதாகவே இருந்தது. 95 வீதமான தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளின் வெற்றியை எதிர்பார்த்திருந்தனர். ஏதாவது அதிசயங்கள் நடந்தாவது அவர்கள் வென்று விடுவார்கள் என்பதே சாமானிய தமிழனின் நம்பிக்கையாக இருந்தது. ஆனால் இறுதியில் அனைத்தும் நிராசையானது.

உண்மையில் அது வெறும் தோல்வியல்ல. நாம், நமது அரசியல் வரலாற்றை திரும்பிப் பார்ப்பதற்கும், கற்றுக் கொள்வதற்கும், சிந்திப்பதற்கும் கிடைத்த அரியதொரு சந்தர்ப்பம். ஆனால் அவ்வாறானதொரு தேடலை செய்ய நம்மால் முடியவில்லை. நமது தவறான அரசியல் புரிதல்களும், இயலாமைகளும் நம்மை தடுத்தது. இன்று யுத்தம் முடிவுற்று பதின்மூன்று வருடங்களாகி விட்டது. இப்போதும் கூட, சுலோகங்களை மட்டுமே உச்சரித்துக் கொண்டிருக்கின்றோம். நாம் முன்வைக்கும் சுலோகங்களில் எவற்றையுமே எங்களால் சாத்தியப்படுத்த முடியவில்லை. இப்போதும் சமஸ்டியடிப்படையிலான அரசியல் தீர்வு தொடர்பில் பேசுகின்றோம். சமஸ்டி தான் தேவையென்பதில் எவருக்கு முரண்பாடுண்டு?

ஆனால் அதனை எவ்வாறு அடையப் போகின்றோம்? 1949இல், இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்ட போது, அதன் இலக்கு சமஸ்டியடிப்படையிலான அரசியல் ஏற்பாடொன்றை பெறுவது தான். ஆனால் அதனை அடைவதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களை செல்வநாயகம் புரிந்து வைத்திருந்தார். இதன் காரணமாகவே, ஆகக்குறைந்தளவிலாவது, சில அரசியல் எற்பாடுகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில், பண்டா-செல்வா, டட்லி-செல்வா உடன்பாடுகளுக்கு சென்றார். ஆனால் தென்னிலங்கையின் சிங்கள இனவாத அரசியல் சூழல், அதனை உள்வாங்கிக் கொள்ளவில்லை. இதன் காரணமாகவே செல்வநாயகம் தனிநாட்டு கோரிக்கையை நோக்கி நகர்ந்தார். ஆனால் அதனை எவ்வாறு அடைவதென்னும் வழிமுறை அவருக்கு தெரியாது. அது என்ன வழிமுறை? இந்தக் கேள்விக்கு பதிலாக வந்தது தான், தமிழ் ஆயுத இயக்க அரசியலாகும்.

தமிழர் அரசியல் எப்போது, ஆயுதவழிமுறையை தழுவிக் கொண்டதோ, அப்போதே அன்னிய தரப்புக்களின் தலையீடுகளும் தமிழ் அரசியலுக்குள் நுழைந்து விட்டது. ஆயுத பயிற்சிக்காக பலதரப்பட்ட அன்னியர்களை அணுகும் போக்கும் உருவாகியது. தெரிந்தும், தெரியாமலும் பல்வேறு முகவர்கள் தமிழர் அரசியலுக்குள் பிரவேசித்தனர். இஸ்ரேலிய உளவுத் துறையான மொசாட் அதிகாரியான விக்டர் ஒட்ரோவ்ஸ்கி எழுதிய நூல், அந்தக் காலத்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. மொசாட் ஒரே நேரத்தில், சிறிலங்கா இராணுவத்திற்கும் பொதுவாக புலிகளென்று அறியப்படும் அமைப்பின் உறுப்பினர்களுக்கும் பயற்சியளித்தமை வெளிச்சத்திற்கு வந்தது. அந்தக் காலத்தில் புலிகளென்று அறியப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்புத் தான். அன்றைய உலக அரசியல் சூழலில், தமிழரின் ஆயுதப் போராட்டத்திற்குள், எவ்வாறெல்லாம் அன்னிய தரப்புக்கள் உள் நுழைந்தன என்பதற்கு, இதுவொரு சிறந்த உதாரணமாகும். எந்தவொரு அன்னிய தரப்பும் தங்களின் நலன்களை புறம் தள்ளி செயற்படாது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், இந்தியா, ஈழத் தமிழர் பிரச்சினையில் நேரடியாக தலையீடு செய்தது. தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சியளித்தது. இதன் தொடர்சியாக இந்திய-இலங்கை ஒப்பந்தம் இடம் பெற்றது. தமிழர்களின் நண்பனாக வடக்கு கிழக்கில் கால் பதித்த இந்திய அமைதிப் படையினர், எதிரியாக நாட்டை விட்டு வெளியேறும் துர்பாக்கிய நிலைமை ஏற்பட்டது. இதன் பின்னரான மூன்று தசாப்த கால விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் 2009இல் முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்றது.

முள்ளிவாய்காலுக்கு பின்னரான அரசியல் முற்றிலும் சம்பந்தனின், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இந்தக் காலத்தை சம்பந்தனால் சரியாக கையாள முடிந்ததா? மீண்டும் தோல்வி தொடர்பிலேயே விவாதிக்க வேண்டிய துர்பாக்கிய நிலைமை உருவாகியது. மகிந்த ராஜபக்ச காலத்தின் விடயங்கள் தொடர்பில் பேசுவதில் பயனில்லை. மகிந்த ராஜபக்ச முற்றிலும் வெற்றிப் பெருமிதத்தோடு மட்டும் தான் விடயங்களை அணுகியிருந்தார். எனவே மகிந்த ராஜபாக்சவின் காலத்தில் கூட்டமைப்பால் விடயங்களை நகர்த்த முடியவில்லை என்பதை புரிந்து கொள்ளலாம்.

ஆனால் 2015இல் தமிழர்களின் ஆதரவுடன் இடம்பெற்ற ஆட்சி மாற்றம் அப்படியல்ல. அது சில சாதகமான வாய்ப்புக்களை வழங்கியிருந்தது. இந்தியாவின் உதவியோடு சில விடயங்களை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டது. ஆனால் சம்பந்தன் அதனை பயன்படுத்திக் கொள்ளவில்லை. சாத்தியமற்ற புதிய அரசியல் யாப்பின் பெயரில் காலத்தை விரயம் செய்திருந்தார்.

அப்போது இந்தக் கட்டுரையாளர் உட்பட பலரும் ஒரு விடயத்தை வலியுறுத்தியிருந்தனர். அதாவது, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையை பலப்படுத்த முயற்சியுங்கள். இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இதற்கு இந்தியாவின் உதவியை கோரலாம். ஏனெனில், யுத்தம் முடிவுற்ற பின்னர், 2009இல், சிறிலங்கா அரசாங்கத்தை பாராட்டி மனித உரிமைகள் பேரவையில் ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். 13வது திருத்தச்சட்டம் அதற்கான அடிப்படையாக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



யுத்தம் முடிவுற்ற உடனேயே ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் 13வது திருத்தச் சட்டம் வலியுறுத்தப்பட்டதிலிருந்து, விடயங்களை சம்பந்தன் தரப்பு புரிந்து கொண்டிருக்க வேணடும். அதனை கவனமாக பற்றிப் பிடித்திருக்க வேண்டும்.

இங்கு 13இல் என்ன இருக்கின்றது, என்ன இல்லை என்பதல்ல விடயம். கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒருவருக்கு, பற்றிப் பிடிப்பதற்கு ஏதாவது ஒன்று வேண்டும். அது மரக்கட்டையாக கூட இருக்கலாம். கரை சேர்வதே முதல் தேவையாகும். ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில், புதிய அரசியல் யாப்பென்னும் பெயரில், கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை சம்பந்தன் நாசமாக்கினார். நாங்கள், 13வது திருத்தச் சட்டத்தை தாண்டி அதிக தூரம் பயணித்து விட்டோம். புதிய அரசியல் யாப்பை நெருங்கி விட்டோம், என்றவாறு கதைகள் சொன்னார். இறுதியில் அனைத்தும் புஸ்வானமாகியது. மீண்டும் தமிழர் அரசியல் நகர்வுகள் தோல்விலேயே முடிந்தது.

இன்னும் எத்தனை காலத்திற்கு தமிழர்களின் தோல்வி பற்றியே நாம் விவாதித்துக் கொண்டிருக்கப் போகின்றோம். தோல்வி பற்றியே விமர்சித்துக் கொண்டிருப்பது? தோல்வி பற்றியே அங்கலாய்த்துக் கொண்டிருப்பது? நமது இயலாமைகளுக்கான பழியை மற்றவர்கள் ஏன் நமது அரசியல் நகர்வுகள் தொடர்ந்தும் தோல்வியடைந்து கொண்டேயிருக்கின்றது?

ஒன்றில் நமக்கு நல்ல தலைவர்கள் கிடைக்கவில்லையா அல்லது நல்ல தலைவர்களை தமிழ் சமூகத்தினால் கண்டு பிடிக்க முடியவில்லையா? அல்லது தமிழர் அரசியல் ஏதோவொரு முள்ளில் சிக்கியிருக்கின்றதா, அதனை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா? ஆனால் ஒவ்வொரு தோல்வியின் போதும், தமிழர்கள் அரயல்ரீதியில் மட்டுமல்ல, சமூக பொருளாதார நிலையில் மேலும் பின்நோக்கி தள்ளப்பட்டுக் கொண்டேயிருக்கின்றனர்.

தமிழர்களின் அரசியல் முன்னெடுப்புக்களின் விளைவுகளை ஒரு சொல்லில் மதிப்பிடுவதனால், தீர்வும் இல்லை முன்னேற்றமும் இல்லை, சமூக ரீதியான முன்னேற்றம் தொடர்பிலேயே இந்தக் கட்டுரை சுட்டிக்காட்டுகின்றது.

நாம் ஓய்வில்லாமல் பேசிக் கொண்டிருக்கின்றோம். எழுதிக் கொண்டிருக்கின்றோம். விவாதித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டேயிருக்கின்றோம்.

ஏன்? தமிழ் சமூகம் இதற்கான பதிலை கண்டடையா விட்டால், தோல்விகள் மட்டுமே நமது கதையாக நீண்டு செல்லும்.

# இந்து மதத்தின் மீதான ரணிலின் திடீர் அக்கறையின் பின்னணி

இலங்கையிலுள்ள இந்து மதத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பது தொடர்பில் ஆராய வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்திய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இந்து ஆலயங்களில் மாத்திரமன்றி, பௌத்த விஹாரைகளிலும் இந்து தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர் என ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் சிவ வழிபாடு பொதுவானது என்பதுடன், இலங்கையின் தென் பகுதியில் விஷ்ணு கடவுளை வழிபடுவது பொதுவாகக் காணப்படுகின்றது என ரணில் கூறுகின்றார். மேலும், தென் பகுதியில் பல இந்து கடவுள்களை மக்கள் வழிபட்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவிக்கின்றார்.

விஷ்ணு, முருகன், பத்தினி (அம்மன்) உள்ளிட்ட பல தெய்வங்களை, தென் பகுதியில் மக்கள் வழிபட்டு வருவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். இந்தியாவிலுள்ள இந்து மதத்திற்கும் இலங்கையிலுள்ள இந்து மதத்திற்கும் இடையில் தனித்துவங்கள் காணப்படுகின்றன.

இலங்கையிலுள்ள இந்து மதம் குறித்து, அறிக்கையொன்றை தொகுத்து வழங்குமாறு, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் தான் கேட்டுக் கொள்வதாகவும் அவர் கூறுகின்றார். இந்த நடவடிக்கைகளுக்கு ஏனைய கட்சிகளும் உதவிகளை வழங்க வேண்டும் என ஜனாதிபதி பகிரங்க கோரிக்கை விடுக்கின்றார்.



அத்துடன், வட இந்தியாவிற்கும் தென் இந்தியாவிற்கும் இடையில் இந்து மதத்திற்கு வித்தியாசம் காணப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். இலங்கையில் வரலாற்று ஆய்வு நிறுவனமொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

நாம் வரலாற்றை மறந்து விடுகின்றோம். எனவே, வரலாறு குறித்து அறிவையும் ஆராய்ச்சியையும் முன்னெடுப்பதற்காக இந்த நிறுவனம் செயற்பட வேண்டும். மகா வம்சத்துடன் நாம் அறிந்த வரலாற்றில் பெரிய வித்தியாசம் இருக்கின்றது.

தகா வம்சத்தில் உள்ள தேதிகளை மாற்ற முடியாது. மகா வம்சத்தில் ஒரு தரப்பினரின் கருத்துகளே உள்ளன. வெளியே மாறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன. இவற்றை கருத்தில் கொண்டு, இலங்கையில் வரலாற்று நிறுவனமொன்றை ஆரம்பிக்க வேண்டும்' என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தீர்மானத்தைத் தான் வரவேற்பதாக



இலங்கை இந்து குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ கு.வை.கா. வைதீஸ்வர குருக்கள் பிபிசி தமிழுக்கு தெரிவித்தார்.

இதுவொரு நல்ல விடயம். நாட்டின் தலைமைத்துவ பொறுப்பில் இருக்கக் கூடிய ஒருவர், ஜனாதிபதியாக இருக்கக் கூடிய ஒருவர் நாடாளுமன்றத்தில் பகிர்ந்துள்ள கருத்து, வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. இலங்கை தீவிலே நாம் பல விதமான இன்னல்கள், சமூக பிரச்னைகள், சமய பிரச்னைகள், இனப் பிரச்னைகள் என்று பலவற்றை எதிர் கொண்டு வந்திருக்கின்றோம்.

அண்மைக் காலமாக சைவ மக்களாகிய நாம், மிகுந்த சவால்களை எதிர்நோக்கி இருந்திருக்கின்றோம். சமய ரீதியிலான புறக்கணிப்புக்கள், இன ரீதியிலான புறக்கணிப்புக்கள், அதேபோல், சமய தலங்கள் மீதான ஆக்கிரமிப்புக்கள், அந்தத் தலங்களை புனர்நிர்மாணம் செய்யும் போது, அதற்கு ஏற்படுத்தப்படுகின்ற தடைகள், அந்தத் தலங்களுக்கு உரிய சொத்துக்களில் குறிப்பிடக்கூடிய வகையில் காணப்படுகின்ற சொத்துக்கள் ஏனைய ஒரு தொகுதியினரால் எல்லையிடப்படுகின்றமை என்று பல விடயங்களை நாம் மிகுந்த வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தோம். அவ்வாறான காலங்களை நாம் கடந்து வந்திருந்தோம். இவை இப்போதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் ஜனாதிபதி இவ்வாறான கருத்தைக் கூறியிருப்பது, சைவ சமயம் சார்பில் நான் வரவேற்கின்றேன். அமைக்கப்படுகின்ற குழுவோ, அல்லது எதுவாக இருந்தாலும் நிதானமான போக்குடன், பக்கச்சார்பு அற்ற நிலையிலே, இலங்கை தேசத்தில் இந்து சமயத்தின் தொன்மையை, பௌத்த சமயத்தின் தொன்மையை ஒவ்வொன்றாகப் பகுப்பாய்வு செய்து, உரிய வகையிலே அது அறிக்கையிட வேண்டும்.

அவ்வாறு அறிக்கையிடப்படுகின்ற பொழுது தான், ஜனாதிபதி கூறியிருக்கக் கூடிய கருத்தினுடைய உண்மையை நடைமுறை சாத்தியமாக்க முடியும் என நான் நினைக்கின்றேன்.

இந்து மதம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில், இந்து மதம் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்கள் என பிபிசி தமிழ், இலங்கை இந்து குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ கு.வை.கா.வைதீஸ்வர குருக்களிடம் வினவியது.

இந்த விடயத்தை இரண்டு, மூன்று பகுதிகளாகப் பார்க்கலாம். தனித்துவங்கள் பேணப்படுதல், அவர்களுடைய தனித்துவத்தில் எந்தவித தலையீடுகளும் இல்லாமல், அவரவர் வழியிலேயே விட்டு விடுதல் ஒன்று.

அடுத்தது, எனக்கு என்று சொல்லிச் சில பொருட்களை வைத்திருப்பேன். அதை இன்னொரு பகுதியினர் வந்து, தேவையற்ற விதத்திலே ஆக்கிரமிக்கவோ அல்லது அதைப் பறிமுதல் செய்யவோ முடியாது, கூடாது, இயலாது.

ஆனால், அப்படியான சில சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு சில சம்பவங்கள் நடந்தால் கூட அது வேதனை. ஆகவே, ஒவ்வொரு சமயத்திற்கும் இருக்கக்கூடிய தனித்துவங்கள் பேணப்பட வேண்டும் என்பதே என்னுடைய கருத்து' என்று அவர் பதிலளித்திருந்தார்.

இலங்கையிலுள்ள பல இந்து ஆலயங்கள், கடந்த காலங்களில் சேதப்படுத்தப்பட்ட சம்பவங்கள், இந்துக்களின் தொல் பொருள்களைப் பாதுகாக்க முடியாமை, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து ஆலயங்களின் தொன்மை பாதுகாக்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் கடந்த காலங்களில் பதிவாகியிருந்தன. இவ்வாறான சூழ்நிலையிலேயே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்து மதத்தின் தனித்துவத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபையில் கூறியிருந்தார்.

– ரஞ்சன் அருண் பிரசாத் –

நன்றி:– பிபிசி



சிவமயம்
ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# போருக்குப் பிந்திய அரசியல் என்றால் என்ன?

கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்



போருக்குப் பிந்திய அரசியல் என்கிறீர்களே! அது என்ன? என்று கேட்டார் மூத்த அரசியல் தலைவர் ஒருவர்.

அதைத் தானே சர்வதேச சமூகம் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக இலங்கையில் வலியுறுத்திக் கொண்டிருக்கிறது என்றேன்.

சர்வதேச சமூகம் என்ன சொல்லுது? என்று திருப்பிக் கேட்டார் தலைவர்.

நான் உட்படப் பலர் அதைப் பற்றி எழுதி வருகிறோம். சிராஜ் மஷ்ஹூரீர் போன்றோரின் பேட்டிகளில் இது பற்றி விரிவாக உரையாடப்பட்டுள்ளது. இதை விட ஊடகத்துறையினர், சமூகச் செயற்பாட்டியக்கத்தினர் போன்றோருக்கெல்லாம் பல கோடிக் கணக்கான பணத்தைச் செலவழித்து, போருக்குப் பிந்திய நிலைமாறு கால கட்ட நீதியைப் பற்றியும் போருக்குப் பிந்திய அரசியற் சூழமைவு பற்றியும் சர்வதேச சமூகத்தினர் விளக்கியிருக்கிறார்கள்.

வதிவிட கருத்தமர்வுகள் பல நடத்தப்பட்டன. போருக்குப் பிந்திய அரசியல் முன்னெடுப்புக்காக செயலணிகள் கூட உருவாக்கப்பட்டன. புத்திஜீவிகள், கலைஞர்கள் போன்றவர்களும் இதற்கான வேலைத் திட்டங்களில் இணைந்திருந்தனர். அரசியல் கட்சிகள், தலைவர்கள் என அரசியற் தரப்புக்கும் போருக்குப் பிந்திய அரசியல் பற்றி வலியுறுத்தப்பட்டது. ஏன், அரசாங்கத்துக்கும் தொடர்ச்சியாக இதைப் பற்றிய அறிவுரையைச் சர்வதேச சமூகம் சொல்லி வந்துள்ளதே. இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் நாட்டில் ஜனநாயகச் சூழலை மேம்படுத்துவதற்குமாக அரசியலமைப்புத் திருத்தம் உள்பட பல வேலைத் திட்டங்களை வலியுறுத்தியதே...இப்படியெல்லாம் இருந்தும் இதைப்பற்றி விளக்கம் கேட்கிறீர்களே! என்று கேட்டேன்.

ஓ... அதுவா? அது ஏதோ என்.ஜி.ஓ வேலையாக்கும் எண்டெல்லோ நினைச்சன்'' என்றார் தலைவர்.

இதற்கு என்ன பதிலைச் சொல்ல முடியும்?

சரி. நீங்கள் சொல்கிற மாதிரி என்.ஜி.ஓ வேலைத்திட்டம் என்று வைத்துக் கொண்டாலும் அவர்கள் சொல்வதை இவர்கள் கேட்டார்கள் அல்லவா! இந்த வேலைத் திட்டத்தில் வழங்கிய கொடைகளைப் பெற்றிருக்கிறார்களே! மட்டுமல்ல, தென்னாபிரிக்கா உட்பட சில வெளிநாட்டுப் பயணங்களுக்கும் அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் இதெல்லாம் இலங்கைக்குச் சரிப்பட்டு வராது என்று யாராவது எப்போதாவது சொல்லியிருக்கிறார்களா? ... அப்பிடிச் சொல்லி மறுத்திருந்தால் கொடைகள் கிடையாது. இதை அவர்கள் எப்படிப் பார்ப்பார்கள்? '' என்று கேட்டேன்.

தலைவருக்கு ஒரு கணம் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. என்றாலும் அவர் தலைவரல்லவா! லேசில் விட்டு விடுவாரா என்ன?

அப்பிடியெண்டால் நீங்கள் வெளிநாட்டுக்காரர் சொல்லிறதுக் கெல்லாம் தலையாட்டச் சொல்கிறீர்களா? இந்த வெளிநாட்டுச் சக்திகளை நம்ப முடியாது. அவர்களால் தான் இலங்கைக்கு வினை வந்தது! இல்லையெண்டால் தமிழர்கள் தனியாகவும் சிங்களவர்கள் தனியாகவும் இருந்திருப்பம். இங்க வந்து எங்கட நாட்டைச் சுரண்டிக் கொண்டு போனது போதாதெண்டு, இனங்களுக்கிடையில் முரண்பாட்டை உருவாக்கி மோத விட்டுப் போனார்கள். இப்ப சமாதானம் பேச வருகினமாம். ஆருக்கு விளையாட்டுக் காட்டுகினம்? அவையள் தார காசை வாங்குவம். அதில என்ன தப்பிருக்கு?

உண்மையில அது எங்கட காசு தான். இஞ்ச, இந்த மண்ணில சுரண்டிக் கொண்டு போன காசு. அதை இப்ப செலவழிக்கினம். செலவழிக்கட்டும். நல்லாச் செலவழிக்கட்டும்...'' என்றார் தலைவர் சற்றுச் சூடாக.

எனக்கு நாக்கு எழவே இல்லை. மூச்சே நின்று விடும் போலிருந்தது. அதற்குள்ளும் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

இந்த மாதிரி அறிவாளித் தலைவர்கள் இருக்கும் வரையிலும் இலங்கைக்கு ...... (கீறிட்ட இடத்தில் எதையாவது போட்டு நிரப்பிக் கொள்ளுங்கள்) இல்லை. இவர்களுக்கு எல்லாமே தெரியும். ஆனால் தெரியாததைப் போல நடிக்கிறார்கள். அல்லது இந்த மாதிரி ஏமாளிகளைப் போலிருந்து எல்லோரையும் ஏமாற்றிப் பிழைக்கிறார்கள்.



இவர்களைப் போலத் தான் ஊடகத் துறையினரும். போருக்குப் பிந்திய ஊடக அளிக்கை பற்றிய சில அமர்வுகளுக்கு நானும் சென்றிருந்தேன். ஊடகத்துறையினர் பலரும் பங்கெடுத்திருந்தனர். அங்கே வழங்கப்படுகின்ற கொடைகளைப் பெறுவதிலும் அளிக்கப்படும் விருந்தை ஆர்வத்தோடு ருசித்துக் களிப்பதிலுமே பெரும்பாலானோர் கரிசனை காட்டினர். அங்கே பேசப்பட்ட விடயங்களில் ஒரு பத்து வீதமானவற்றைக் கூடக் கவனத்திற் கொள்ளவில்லை. பின்னாளில் எழுதப்பட்ட, எழுதப்படுகின்ற செய்திகள், கட்டுரைகள் எல்லாவற்றிலும் எந்த விதமான மாற்றங்களும் இல்லாமல் போருக்கு முந்திய, போர்க்காலத்தைய இனவாதத்தையே அள்ளி இறைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சில வேளை அரசியல்வாதிகளை விடவும் மோசமாக ஊடகத்துறையினர் நடந்து கொள்கின்றனர். உலகளாவிய அளவில் போருக்குப் பிந்திய சமூகங்கள் எப்படி தீர்வைக் கண்டிருக்கின்றன? அங்கெல்லாம் ஊடகத்துறை எப்படிச் செயற்பட்டிருக்கிறது? ஊடகவியலாளர்களின் பங்களிப்புகள் எப்படி இருந்தது? இங்கே எப்படி அந்தப் பங்களிப்பைச் செய்யலாம்? என்பதைப் பற்றியெல்லாம் சிந்திப்பதைக் காணவில்லை. வெளிநாட்டுப் பயணங்களில் அழைத்துச் செல்லப்பட்டு வந்தவர்கள் கூட அங்கே எதைப் பெற்றார்கள் என்று தெரியவில்லை.

இவர்களிடமும் என்.ஜி.ஓ மனநிலையே உள்ளது போலிருக்கிறது. புத்திஜீவிகளின் கதையைச் சொல்ல வேண்டாம். அவர்களுக்கு இது மேலதிக உழைப்பு மேலதிக வசதி. அப்படித்தான் நடந்து கொண்டனர். அதுவும் நல்லாட்சிக் காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஒரு பெரிய கட்டமைப்பு மீளிணக்கச் செயற்பாடுகளுக்கென உருவாக்கப்பட்டிருந்தது. அதில் நூற்றுக்கணக்கான சமாதான மேதைகள் பங்கெடுத்திருந்தனர். ஏராளமான திட்டங்கள் உருவாக்கப்பட்டது. கடையில் மிஞ்சியது...?

கலைஞர்கள் பாவம். அவர்களுக்கு இது ஒரு மேடை. எதிர்பாராத ஒரு சிறிய வாய்ப்பு. ஆடினார்கள், பாடினர்கள், ஓவியம் தீட்டினார்கள், சில ஒளிப்படங்களை எடுத்து காட்சிப்படுத்தினார்கள். சிலர் சில விவரணப் படங்களையும் குறும்படங்களையும் சமாதானத்துக்காக எடுத்தார்கள். சமாதான தேவதை மட்டும் இறங்கி வரவேயில்லை.

இவர்களே இப்படியென்றால், அரசும் கட்சிகளும் எப்படி நடந்திருக்கும் என்று எண்ணிப் பாருங்கள். வழங்கப்பட்ட கொடைகளை எல்லாம் வாங்கிக் கொண்டு பின்பக்கத்தைக் காட்டின.

இறுதியில் போருக்குப் பிந்திய அரசியல் காணாமலே போய் விட்டது. என்பதால் தான் இலங்கையில் எந்த மாற்றமும் நிகழவில்லை. சமாதானம் உருவாகவில்லை. சமூகங்களுக்கிடையிலான இணக்கம் ஏற்படவில்லை. புரிந்துணர்வு உருவாகவில்லை. பகை மறப்பு நிகழவில்லை. பொறுப்புக்கூறும் தன்மை ஏற்படவில்லை. நீதி வழங்கப்படவில்லை. நிவாரணம் அளிக்கப்படவில்லை. எதற்கும் எந்தப் பரிகாரமும் காணப்படவில்லை.

ஆக அத்தனை பிரச்சினைகளும் அப்படியே கொதித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் புதிய பிரச்சினைகள் வேறு உருவாகியுள்ளன. பிரச்சினைகள் கொதிக்கக் கொதிக்க சமூகங்களுக்கிடையிலான முரண்பாடு அதிகரிக்கும். முரண்பாடு அதிகரிக்க மக்களின் வாழ்க்கை பாதிப்படையும். நாடு பின்னடையும். அதுவே நடந்தது—நடந்து கொண்டிருக்கிறது.

இன்று இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது என்றால் அதற்கு தனியே ராஜபக்ஸக்களின் ஊழல் மட்டும் காரணமில்லை. அல்லது அவர்களுடைய தவறான பொருளாதாரத் திட்டங்கள் தான் பிழைத்தன என்றில்லை. இனப்போரும் அது உண்டாக்கிய உற்பத்தித்துறை வீழ்ச்சியும் தொடரும் முரண்பாடும் காரணமாகும். அதிகரித்த படைத்துறைச் செலவு எதனால் ஏற்பட்டது?

உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடி இப்பொழுது அனைவரையும் பாதிக்கிறது என்றால்...அதற்குக் காரணம் முழு இலங்கையர்களும்தான். அவர்கள் விட்ட தவறுகள்தான். இதில் யாரும் யாரையும் சாட்டி விட்டுத் தப்பி விட முடியாது.

ஆனால், இதைப் பற்றிப் பகிரங்க வெளியில் வெளிப்படையாகப் பேசுவதற்கு யாரும் முன் வருவதில்லை. கடந்த வாரம் விக்டர் ஐவன் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அதில் சிங்களத்தரப்பின் உளச் சிக்கல்களைப் பற்றியும் அநாகரிக தர்மபால உருவாக்கிய சிங்க வரலாற்றுப் பெருமிதம் எப்படிச் சிங்கள மக்களைப் பிழையான சுழிக்குள் வீழ்த்தியது என்பதைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களைப் பற்றி ஆராய்கின்ற ஐவன், இனப்பிரச்சினையும் அதன் விளைவான போரும் இன்னும் தொடருகின்ற இனவாதமும் செலுத்தும் தாக்கத்தைப் பற்றிப் பேசவேயில்லை. ஏன் யுத்தத்திற்குப் பின் அரசும் சிங்களச் சமூகத்தினரும் செய்திருக்க வேண்டிய பொறுப்பான வேலைகளைப் பற்றி ஒரு சொல் சொல்லவில்லை. கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கை அரசுக்கும் இலங்கைச் சமூகங்களுக்கும் ஏராளம் நிதியை சர்வதேச சமூகம் அள்ளிக் கொடுத்தது. பல அறிவுரைகளைச் சொன்னது. சமாதானத்துக்கான வேலைத் திட்டங்களையும் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் பரிந்துரைத்தது. சுருக்கமாகச் சொன்னால் நிறைய வீட்டுப் பாடங்கள் கொடுக்கப்பட்டன.

காசை வாங்கிக் கொண்டு அவ்வளவு பரிந்துரைகளையும் அறிவுரைகளையும் அரசும் அதன் குடிகளும் காற்றில் பறக்க விட்டன. அதற்கு வழங்கப்பட்ட தண்டனையே இப்போதுள்ள நெருக்கடி. இதைப் பற்றியெல்லாம் ஐவன் போன்றோருக்கு நன்றாகத் தெரியும். ஐவன் போன்ற சிங்களப் புத்திஜீவிகள், ஊடகத்துறையினருக்கு மட்டுமல்ல, தமிழ், முஸ்லிம் தரப்பிலுள்ள புத்திஜீவிகள், ஊடகத்துறையினருக்கும் நன்றாகத் தெரியும்.

போரில் நாடு அழிந்ததும் வாழ்க்கை சுருங்கிக் கிடந்ததும் எல்லோருக்கும் மறந்து விட்டது.


பதிலாக ஆளாளுக்குப் பழியுணர்ச்சியைப் பெருக்கிக் கொண்டு வென்றவர் ஒரு தரப்பிலும் தோற்றவர் இன்னொரு தரப்பிலுமாக நின்று அடிபடுகிறார்கள். இனவாதம் முன்னரை விடப் பன்மடங்கு செழித்து வளர்ந்துள்ளது. இந்த இனவாதப் போக்கிற்குள் நின்று கொண்டு அமைதியைக் காண முடியாது. இனவாதத்தைப் பெருக்கிக் கொண்டு தீர்வையும் எட்டமுடியாது. இல்லை, இதற்குள் தீர்வைக் காண முடியும் என்றால், அது எப்படி என்று அவர்கள் சொல்ல வேண்டும். அதைச் செய்து காட்ட வேண்டும்.

இப்போதைய போக்கில் ஒரு போதுமே இலங்கையில் அமைதி கிட்டாது. அமைதி கிட்டவில்லை என்றால் நாட்டில் முன்னேற்றம் ஏற்படாது. என்ன வித்தைகளைச் செய்தாலும் நெருக்கடியைக் குறைக்க முடியாது. ஆகவே போருக்குப் பிந்திய அரசியலை முன்னெடுத்தே தீர வேண்டும்.


போருக்குப் பிந்திய அரசியல் என்றால், எதன் பொருட்டுப் போர் உருவாகியதோ அந்தக் காரணங்களை இல்லாமலாக்குவது. இதற்கே கற்றுக் கொண்ட பாடங்கள், படிப்பினைகள். இதற்கே கை மறப்பு. இதற்கே நல்லிணக்கம். இதற்கே நீதி பரிகாரம். இதற்கே பொறுப்புக் கூறல்.

இதைச் செய்வதாக இருந்தால் முதலில் நேர்மையான முறையில் தம்மை இதற்காக அர்ப்பணிக்க வேண்டும். இதில் (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வீட்டில் நிம்மதியான நிலை காணப் படும். நிதானத்தைக் கடைப் பிடிப்பது அவசியம். தொழிலில் நல்ல லாபத்தை எதிர்பார்க்கலாம். முக்கிய முடிவுகளை இப்போது செய்யலாம். சிலர் உங்களை பார்த்து பொறாமையாக நினை ப்பார்கள். குடும்பத்தில் பிரச்சனைகள் ஏதும் இராது. நல்ல சுபிட்ஷமும் சௌபா க்கியமும் உண்டாகும். உடன் பிறந்தோர் உற்ற துணையாக இருப்பர். கணவன் மனைவிடையே அன்பு காணப்படும்..




ரிஸபராசி அன்பர்களே! முன் னேற்றப்பாதையில் செல்வீர்கள். தொழில், வியாபாரம் மந்தமாக காணப்பட்டாலும் அதிக நஷ் டம் இல்லாமல் இருக்கும். வாடிக்கை யாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வீர கள். அதிக முதலீடுகளை செய்யாமல் இருப்பது அவசியம். குடும்பத்தில் முக் கிய நபர்களின் தலையீடு இல்லாமல் பார்த்து கொள்ளுங்கள். பொருளாதார விஷயத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு மகிழ்ச்சி உண்டாகும்




மிதுனராசி அன்பர்களே! மகிழ் ச்சியுடன் எதிர்பார்த்ததை பெறு வீர்கள். தொழிலில் நல்ல லாபம் உண்டாகும். சிலர் கடினமாக உழைத்து வெற்றி பெறுவர். முக்கிய நபர்களை இந்த வாரம் சந்திக்க வெற்றி உண்டாகும். குடும்பத்தில் கண வன்.மனைவி இடையே கருத்து வேறு பாடுகள் ஏற்பட்டாலும், நீங்கள் விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் அதை சமா ளிக்கலாம். உங்களிடம் வாக்கு வாதத்திற்கு குடும்பத்தினர் வரலாம்.



கடகராசி அன்பர்களே! மனதில் தெளிவு உண்டாகும். மன நிம்மதி பெற தியானம் செய்யுங் கள். தொழிலில் உங்களுக்கு அதிக நன்மைகள் ஏற்பட்டு எந்த தடையும் இல்லாமல் தொழில் அபிவிருத்தி இருக்கும். நல்ல லாபத்தையும் பார்க்கலாம். முன்னேற்றம் உண்டு. குடும்பத்தினரால் சிறு பிரச்சனைகளுக்கு கூட டென்ஷன் ஆவீர்கள். சிலருக்கு அலர்ஜி தொந்தரவுகள் வந்து நீங்கும். உடன்பிறந்தோர் உறு துணையாக இருப்பார்கள்



சிம்மராசி அன்பர்களே! சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். தேங்கிய பொருட்கள் எல்லாம் விற்பனையாகி விடும். குடும்ப த்தில் கணவன் மனைவி ஒற்றுமையில் சிறு சங்கடங்கள் வந்து விலகும். மனைவியின் உடல்நலத்தில் தகுந்த கவ னம் தேவை. வீடு மனை வாகன வகை களில் திருப்தியான நடைமுறைகள் இரு க்கும். கடந்த காலங்களில் இருந்த நிலைகள் மாறி மனதிற்கு மகிழ்ச்சி தரும்



கன்னிராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை சற்று ஒத்திப் போடுவது நல்லது. நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நல்ல செய்திகள் வரவில்லை என்ற கவலை வேண்டாம். கூடிய விரைவில் உங்கள் காதுகளை அது எட்டும். தொழி லைப் பொறுத்தவரை பிரச்னைகள் வந்தா லும் அது உங்களை பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது. நிறுவனத்தின் புகழ் எட்டுத்திக்கும் பரவும். கொடுக்கல், வாங்கல் விஷயங்கள் சுமுகமாக முடியும்.




துலாம்ராசி அன்பர்களே! வரு மானம் திருப்திகரமாக இருக் கும். தொழிலில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பாக்கிகள் அனைத்தும் கிடைக்கும்.தேவைப்படும் இடங்களில் இருந்து உதவிகள் கிடை க்கப் பெற்று மகிழுவீர்கள். குடும்பத்தில் நிம்மதி இருக்கும். உற்றார், உறவினர்களு டன் விருந்து கேளிக்கைகளுக்கு சென்று வருவீர்கள். நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்படும். திருமண வயதிலுள்ள அன்பர் களுக்கு நல்ல வரன் அமையக்கூடும். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு உள்ளது




விருச்சிகராசி அன்பர்களே! அனைத்து விஷயங்களிலும் நம்பிக்கையோடு செயல்படுவீர்கள். பயணங்களின்போது உங்கள் பொருட்களை கவனமாக பாதுகாத்து கொள்ளவும். தொழிலில் நல்ல லாபமும் முன் னேற்றமும் இருக்கும். புதிதாக தொழில் துவங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். குடும்பத்தில் சில விவாதங் கள் வந்து போகலாம். பிள்ளைகளின் விஷய த்தில் கவலை வேண்டாம். இருக்கும் இடத்தில் இருப்பது அதிக நன்மை.







தனுசுராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். கைக்கு வராது என்றிருந்த பணம் கூட கைக்கு வந்து சேரும். உடலில் இருந்து வந்த பிரச்ச னைகள் அகலும். தொழிலில் வருமானம் நல்லபடியாக இருந்தும் வீண் செலவுகள் ஏற்படுவதால் மனம் கவலையில் இருக் கும். குடும்ப ரீதியாகவோ, தொழில் ரீதி யாகவோ முக்கிய முடிவுகள் எடுக்க சற்று கஷ்டப்பட வேண்டி இருக்கும். குடும்ப த்தில் சுமூகமான சூழ்நிலை நிலவும்.



மகரராசி அன்பர்களே! நீங்கள் எடுக்கும் முடிவில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. நீங்கள் நடந்து கொள்ளும் விதம் சிலருக்கு புதிராக இருக்கும். தொழிலில் நல்ல அபிவிருத்தி உண்டாகும். புதிய தொழிலில் ஆர்வம் அதிகரிக்கும். பங்குதாரர்களுடன் சிறு வாக்கு வாதங்கள் உண்டாகலாம். குடும்பத்தில் பணவரவிற்கு குறைவிருக்காது. உடல் நிலையில் அவ் வப் போது தொந்தரவுகள் வருவதை தவிர உங்களுக்கு நன்மையே நடக்கும்.



கும்பராசி அன்பர்களே! பொறுப்பு களை உணர்ந்து செயல்படுவது அவசியம். கோபுர தரிசனம் உங்களுக்கு கை கொடுக்கும். வேலை பார்க்கும் இடத்தில் பிரச்னைகள் எழலாம். கவனமுடன் இருப்பது மிக முக்கியம். உடன் பணிபுரிபவர்கள் உற்ற துணையாக இருப்பார்கள். தொழிலில் உன்னத நிலை ஏற்படும். குடும்பத்தின ருடன் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்வீர கள். குடும்பத்தார் ஒன்று சேர்வார்கள்.



மீனராசி அன்பர்களே! தேவை யில்லாத பிரச்னைகளை சந்திப் பீர்கள். சிறு சிறு உடல் உபா தைகளால் அவதிப்பட நேரலாம். ஆதலால் மனசோர்வும் உண்டாகலாம். செலவுகள் ஏற்படும் நேரம். புதிய தொழில் துவங்குவது இருக்கும் தொழிலை விரிவு படுத்துவது போன்ற அனைத்துமே செய்ய லாம். குடும்பத்தில் சந்தோஷம் நிலைத்தி ருக்கும். அனைத்து வசதி வாய்ப்புகளும் தாமாகவே வந்து சேரும். அரசு வேலை களில் இருந்த தொய்வு நிலை மாறும்.


வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.


# போருக்குப் பிந்திய அரசியல் என்றால் என்ன?

(21ம் பக்கத் தொடர்ச்சி) வரும் சவால் களை ஏற்றுக் கொள்ளும் துணிவு வேண்டும். அர்ப்பணிப்பு உணர்வு வந்து விட்டால் அதற்கான துணிவும் பிறந்து விடும். சில சந்தர்ப்பங்களில் கட்சியை மீறி, அது பிரதிபலிக்கின்ற சமூகத்தை மீறிச் செயற்படவும் வேண்டும். தென்னாபிரிக்காவில் இதை மண்டேலா செய்தார். என்றபடியால் தான் அவரால் அங்கே நிறவெறியை இன முரணை முடிவுக்குக் கொண்டு வரக்கூடியதாக இருந்தது. மண்டேலா வுக்கும் நெருக்கடிகள் ஏராளமாக இருந்தன.

முதற்கட்டத்தில் அவர் வெள்ளையர் களின் நெருக்கடியைச் சந்தித்தார். இரண்டாம் கட்டத்தில் சொந்த இனத் தவர்களாகிய கறுப்பினத்தவர்களாலேயே நெருக்கடியைச் சந்தித்தார். ஆனால் உறுதியும் அர்ப்பணிப்பு மனநிலையும் மண்டேலாவுக்கு இருந்ததால் அதை யெல்லாம் வென்றார். தலைமைத்துவம் என்பது அது தான்.

இலங்கையின் மரபு நிலைப்பட்ட கட்சி அரசியல், தேர்தல் வெற்றிக்கான அரசி யல் போன்றவற்றை மனதில் வைத்துக் கொண்டு இதையெல்லாம் செய்யவே முடியாது. அது வேறு. இது வேறு. இது நாட்டை மீட்பதற்கான முதலாம் கட்டப் பொறிமுறையாகும். நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்றே எல்லா ஆட்சியாளர்களும் பிரகடனங்களைச் செய்தனர். இந்தப் பிரகடனங்களை நம்பியே மக்களும் அவர்களுக்கு வாக்களித்தனர். ஆனால், சொன்னபடி நாடு கட்டியெழுப்பப்பட்டதா?

இதைப்பற்றி நாம் தெளிவாகச் சிந்திக்க வேண்டும். இலங்கை ஒரு பௌத்த சிங்கள தேசமல்ல. மாறாக இது ஒரு பல்லின நாடு. இங்கே ஒரு சுவாரசிய மான முரணையும் அருமையான உண்மையையும் நாம் அறிய முடி கிறது. அநாகரிக தர்மபால தொடக் கம் இன்று வரையான பெரும்பாலான சிங்கள அறிஞர்களும் அரசியல்வாதி களும் இலங்கையை பௌத்த சிங்கள தேசம் என்றே கட்டமைத்து வந்துள் ளனர். சிங்கள மக்களும் இந்த நம்பி க்கையோடு தான் உள்ளனர். இந்தப் பதட்டத்தில்தான் தொல் அடையாளங் களைத் தேடும் அவசரம் இந்த நெருக்கடிச் சூழலிலும் முடுக்கி விடப் பட்டிருப்பதாகும்.

ஆனால் சிங்களவர் அல்லாத ஏனைய மக்களும் சர்வதேச சமூகத்தினரும் இலங்கையை ஒரு பல்லின மக்கள் வாழும் நாடு என்றே கருதுகின்றனர். பல்லினங்கள் வாழுகின்ற நாடு என்ற அடிப்படையில் பன்மைத்துவம் பேணப்பட வேண்டும் என்று கூறு கின்றனர். இதற்கு மாறாகச் சிந்திப்பது என்பது எவ்வளவு மடத்தனமானது! இதே வேளை தமிழ்த் தரப்பிலும் இனவாதச் சிந்தனை நிறைய உண்டு. அதையும் சிங்கள இனவாதத்தையும் ஒரே நிலையில் பார்க்க முடியாது. ஆனாலும் இரு தரப்பிற்கும் பொறுப்பு களும் கடப்பாடுகளும் அதிகமுண்டு.

ஆகவே முதலில் போருக்குப் பிந்திய அரசியலுக்கான ஆரம்பப் புள்ளிகளை உருவாக்க வேண்டும். அதற்கு ஆரம்பமாகத் தேவைப்படுவது நம் முடைய மனநிலையில் உண்டாக வேண்டிய சிந்தனை மாற்றமாகும். அந்தச் சிந்தனை மாற்றத்தை உரு வாக்குவதே முதற்கட்டப்பணி. ஆம், முதற்கட்டப் பணி கற்றுக் கொண்ட பாடங்கள் படிப்பினைகளாகும்.

# தமிழர் தேசத்துக் கல்வி மீண்டெழ

(5ம் பக்கத் தொடர்ச்சி) எம் தேசத்துக் குழந்தைகள் என்ற உணர்வோடு ஆசிரியர்களான நீங்கள் ஆற்றும் பணியை அனைவரும் மதிக்கின்றனர் வாழ்த்துகின்றனர்! இன்னும் நாம் எமது கடந்த கால இலக்குகளை அடையவில்லை. அவை அடை யப்பட வேண்டியவை. அதுவும் எமது காலத்தில் அவை அடையப்பட வேண்டும். அதற்காக எத்தகைய சவால்கள் வந்தாலும், அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டு பணியாற்றுவோம்.

இறைவனின் ஆசியும், குழந்தைகளின் பெறுபேற்று வெற்றி, அவர்களின் உயர்ச்சி, அவர்கள் பெறும் பதவிகள், பட்டங்கள் என்பன உங்களுக்கு அணிகலன்களாக அமையும் என்பது உண்மை. உங்களுக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!

நாம் பல்லாண்டு காலம் கொடிய யுத்தம், அனர்த்தம் என்பவற்றை கடந்து வந்த வர்கள். அந்த காலங்களிலும் நாம் கல்வியை கைவிட்டதில்லை. அதற்காக அக் காலத்தில் யாரும் தடையாக இருந்ததும் இல்லை. இன்று தடைகளும் திணிப்பு களும் எம்மை ஆக்கிரமிக்க தொடங்கியுள்ளன. தலையீடுகள் பல எமது எதிர்கால குழந்தைகளில் கல்வியை சீரழிக்க முனைகின்றன. அவற்றுக்கெல்லாம் நாம் இடம் கொடுக்க முடியாது.

உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் உங்கள் கைகளில் மட்டுமே தங்கியுள்ளது என்பதை நீங்கள் மனதில் இருத்தி தொழிற்பட வேண்டும் என வினயத்துடன் கேட்டுக்கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டிருந்தது.

# யார் அந்த மூன்றாந் தரப்பு

(5ம் பக்கத் தொடர்ச்சி) அந்த நேர்காணலில் விடுதலைப் புலிகளின் தவறுகளுக்கு பாலசிங்கம் மன்னிப்பு கோரியிருந்தார். ஆனால் அப்போது நிலைமைகள் அதிகம் மாற்றமடைந்திருந்தது. எனவே இந்த அனுபவங்களிலிருந்து சிந்தித்தால், மூன்றாம் தரப்பொன்றின் தலையீட்டுக்கான தேவையேற்படுமாக இருந்தால், தமிழ் தேசியக் கட்சிகள் இந்தியாவிற்கு பகிரங்கமான அழைப்பை விடுக்க வேண்டும். இந்தியாவின் மத்தியஸ்தத்தை கோரவேண்டும்.

# தமிழ்மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு ரணிலிடம் கோரிய “றோ”

(6ம் பக்கத் தொடர்ச்சி)அவ்வாறான சந்திபொன்று இடம்பெற்றிருந்தால் ஜனாதிபதி அது குறித்து நாடாளுமன்றத்திற்கு அறிவிப்பார் என தெரிவித்த அவர் எதனையும் மறைக்காமல் அவர் நாட்டிற்கு தெரிவிப்பார் என கருதுகின்றோம் எனவும் குறிப் பிட்டுள்ளார். ரோவின் தலைவர் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்சவையும் சந்தித்தார் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சந்திப்பின்போது அடுத்த தேர்தல் தொடர்பான செய்தி தெரிவிக்கப்பட்டி ருக்கலாம் என பசில் ராஜபக்சவிற்கு நெருக்கமான வட்டாரமொன்று தெரிவித்து ள்ளது. ரோவின் தலைவரின் விஜயம் குறித்து இந்திய தூதரகத்திடம் கருத்து பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய புலனாய்வு பிரிவான 'றோ' வின் தலைவரை சந்தித்தது குறித்து எதுவும் தெரியாது என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.